1034

ஸ்ரீ நரஸிம்ஹ ப்ரியா

1034
3-11

அழகர்

JL
N55·14·8
199559

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 214

2. பிரசாரம் 216
[ஸ்ரீ. உப. C. K. பார்த்தஸாரதி ஐயங்கார்ஸ்வாமி, அட்வோகேட், திருவல்லிக்கேணி, சென்னை.]

3. திருப்பாவைக்கதை 221
[ஸ்ரீ.உப. திருவரங்கம், திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M.O.L., திருப்பதி.]

4. பட்டாபிஷேக ஸ்ரீமுகம் 225
[ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, தலைமை ஆசிரியர்; ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, ஸ்ரீரங்கம்.]

5. ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் 229
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, M. A. B. L, அட்வோகேட், திருச்சி.]

6. தீர்ப்பாரை 233
[ஸ்ரீ. உப. ஒரகடம் K. ஸுதர்சநாசார்யஸ்வாமி, ரிடையர்டு தமிழாசிரியர், அவளூர்]

7. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 236

8. செய்திகள் 239

9. பஞ்சாங்கஸங்க்ரஹம் 240

பெரியோர்களின் விஜயம்

மந்மதஆண்டு நமதுகலாசாலைக்கு நல்லாண்டாகவே ஆரம்பித்ததைக்குறித்து நாம் ஸந்தோஷிக்கிறோம். வருஷப்பிறப்பன்று நமது கலாசாலையின் அபிவ்ருத்தியிலும் புது கல்விதிட்டத்தின் நோக்கத்தில் ஊக்கங்கொண்டுள்ளவருமான மஹநீயர் ஸ்ரீ. உப, C. R. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி (சுதேசமித்ரன்பத்ராதிபர்) நமதுகலாசாலையை நேரில் பார்வையிட்டு பிள்ளைகளுக்கு சிறந்த நன்மொழிகளையும் அளித்து உகந்தார்கள். இம்மாதிரியான மஹான்களின் நல்லெண்ணமும் பேருதவியும் நமக்கு இருக்கும்பொழுது நமக்குள்ள தைர்யத்துக்கு என்ன குறைவு. ஸ்ரீந்ருஸிம்மன் மேன்மேலும் இம்மாதிரியே நமக்கு உதவி புரிவானாக.

ஈ. தி. ராமஸ்வாமி, அத்யக்ஷர்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 14 } மன்மத ௵ ஆவணி ௴ { ஸஞ்சிகை 8

‘𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥’

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌭𑌵𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா’ என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

உலகில் காணப்படும் பற்பல மதங்கள் பற்பல தலைவர்களைப் பின்பற்றி வந்தன. அதாவது:– பல அறிஞர்களினால் ஸமூஹநிலையைக் குறித்தும், ஆன்மீக வளர்ச்சியைக் குறித்தும் குறிப்பிட்ட கோட்பாடுகளுடன் வகுக்கப்பட்டுள்ள வாழ்க்கை முறைகள். ஆனால் நமது புராதன ஹிந்துமதம் என்பது இம்மாதிரி மதத் தலைவர்களினால் ஏற்படுத்தப்பட்டதல்ல. உலக கர்த்தாவாகிய பரப்ரஹ்மத்தினால் உலகநன்மைக்காக வகுக்கப்பட்டதேயாகும். இஹ, பரலோகத்திற்காக, அதாவது:– இவ்வுலகு, மறு உலகு என்ற ஈருலகுக்காகவும் இவ்வுலகில் உள்ள ஜீவாத்மாக்களின் நலனுக்காகவும் உண்டாக்கப்பட்டது. இது வாழ்க்கை முறையே ஆகும்.

இந்து மதமும் ஜாதிப்பாகுபாடும்

வாழ்க்கை முறை செம்மையாக இருக்க வேண்டுமானால், சீர்மையாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உலக ஸ்ருஷ்டியானது, சரித்ர வாயிலாக அறியமுயலும் விமர்சகர்களின் கருத்தை யநுஸரித்துப் பார்த்தால் உலகம் தோன்றிய நாள்முதல் பற்பலவித வித்யாஸங்களுடனேயே அமைந்திருந்தது. இப்பொழுதும் வித்யாஸங்களுடன் அமைந்திருக்கிறது. இனியும் இம்மாதிரியே இருக்குமென்பதில் யாருக்கும் ஸந்தேஹம் இருக்கக் காரணமில்லை ஆகவே வேற்றுமை என்பது உலக இயல்பு. இதைத் தவிர்க்க முயல்வது என்பது இயற்கையை எதிர்த்துப் போராடுவதேயாகும்.

இம்மாதிரியான வேற்றுமைதான் ஜாதி வர்க்கபேதமுங்கூட. ஒருமனிதனின் வளர்ச்சியில் சைசவம், கௌமாரம், யௌவனம், வார்த்தக்யம், அதாவது:— இளமைமுதுமை போன்ற பர்வாக்கள் எப்படி நியதங்களோ அதேமாதிரி தான் ஸமூஹவளர்ச்சியில் ஜாதிப்பாகுபாடுகள். இவைகளை மறந்து நாம் ஏதோ ஒரு வித ஒற்றுமையை ஏற்படுத்துவதாக முயன்று வருவது வீண் ப்ரயாசையேயாகும்.

'ஜாதிவர்க்கபேதங்களற்ற மக்கள் திருப்தியுடன் க்ஷேமமாக வாழும் சோஷலிஸபாணி ஸமுதாயத்தை ஏற்படுத்த இந்தியா தீர்மானித்திருப்பது மிகவும் பொருத்தமானதாகும்,' 'இம்மதத்தில் பல புல் பூண்டுகள் முளைத்துவிட்டன. இந்த களைகளை அகற்ற வேண்டும்', 'ஜாதிப்பாகுபாடுமுறை சீர்கெட்டு விட்டது. இப்பொழுது ஹிந்துக்களை ஒரே கடவுளும், ஒரே தர்மமும், ஒரே ஜாதியும் உள்ள ஸமுதாயமாக ஐக்யப்படுத்துவது அவசியம்' என்றெல்லாம் நன்கறிந்தவர்கள் கூறி வருவதை நாம் ஸமீபத்தில் படிக்க நேர்ந்தது. (தினமணி 1–8–1955) ஆஸ்திக்யத்தில் நம்பிக்கையுள்ளவர்களும், உன்னதபதவியில் உள்ளவர்களும் உலகிலுள்ள பெருவாரியான பாமர மக்களின் த்ருப்திக்காக இம்மாகிரி கூறிவருவது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். ஹிந்துமதம் என்பது ஆன்மீக வளர்ச்சியோடு கூடிய வாழ்க்கைமுறையேயாகும். இவ்வாழ்க்கை முறையில் அமைதியை நிலைநாட்டுவதென்பது ஜாதிப்பாகுபாடேயாகும். ஸமீபகாலத்தில் இம்முறையில் சில களைகள் (புல் பூண்டுகள்) தோன்றியுள்ளன வென்பது உண்மையே. நல்லபயிரில் இடையிடையே தோன்றிய மற்றைய செடிகளைத்தான் களைகளென்று கூறுகிறோம். அவைகளை எடுக்க முயலும் ஸமயத்தில் பயிரையே அழிப்பது பொருத்தமாகுமா.

முதற்பயிரை அழித்துவிட்டு வேறுபயிரை வளர்க்கலாமெனக்கூறுபவர்களுமுண்டு. இவர்

களைப்பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. முதற்பயிரைக் காப்பாற்றிவருபவர்களைப் பற்றிதான் நாம் கவலைப்படுகிறோம். உலகில் நஷ்டமோ, அழிவோ கிடையாது என்ற ஓர் விதக்கொள்கையைப்பற்றி நாம் கேள்விப்பட்டதுண்டு. எட்டு அணா கொடுத்து வாங்கிய மெழுகு வத்தியை குழந்தைத் தனத்தினால் எறியவைத்துத் தீர்த்தபின் இந்தச் செயலினால் நஷ்டம் ஏதும் ஏற்படவில்லை என்றார் ஓர் அறிஞர். மண்ணினால் செய்யப்பட்டது மண்ணோடு மடிந்தால் நஷ்டமென்ன என்ற உயர்ந்த கொள்கையைப் பின்பற்றிய உபதேசமே இது. ஆனால் உலகங்களில் நாம் வாழும் அளவில் இது நஷ்டமா இல்லையா என்பதை ஒவ்வொருவரும் யோசித்தல் வேண்டும்.

தொன்றுதொட்டுவந்த வாழ்க்கைமுறையை சிதரவடித்துவிட்டு புது வாழ்க்கை முறையை ஏற்படுத்திக்கொள்ள முயலுவதை நாம் கண்டு வருந்துகின்றோம். புதுமுறை வாழ்க்கை முறைகளை ஏற்படுத்திக்கொள்ள முயலுகிறவர்களின் மனோநிலை விசித்ரமான வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது. 'ஒரே கடவுளும் ஒரே தர்மமும், ஒரே ஜாதியும் உள்ள ஸமுதாயமாக ஐக்யப்படுத்துவது அவசியம்'என்று இந்தப் பெரியவர் கூறுகிறார். (தினமணி 1-8-55) இந்த ஏற்பாடு கேட்பதற்கு மிகவும் இனிமையாகத்தான் இருக்கிறது. ப்ளேடோ என்ற அரசியலறிஞர் மானஸிகமாக ஓர் உன்னத அரசாட்சியை பாவித்து உலகத்திற்கு உகந்ததாகக் கூறினார் என்பதை அரசியல் படிப்பில் ஆழ்ந்தோர் நன்கு அறிவர். இம்மாதிரியான அரசியல் அமைப்பு நடைமுறையில் ஸாத்யமில்லை என்பதையும் அவர்ளில் யாவரும் அறிவர். அப்படியிருக்க இம்முறையே சாலச்சிறந்தது, இதையே நாம் அமைத்துக்கொள்ளவேண்டும் எனக்கூறுவது எவ்வளவு புத்திசாலித்தனம் என்பதை நாம் யோசிக்கவேண்டும். ஒரே கடவுளை நாம் வழிபடவேண்டும், ஒரேதர்மத்தை நாம் பின்பற்ற வேண்டும், ஒரே ஜாதியாக வாழவேண்டும் என்றெல்லாம் கூறுவது மேடைப் பேச்சளவில் முடியுமே யல்லாது நடைமுறையில் ஸாத்யமில்லை. பல கடவுளைப் பின்பற்றிவருபவர்களுக்கும் கடவுளின் தன்மை ஒன்றுதான். தர்மங்களின் அடிப்படை ஒன்றுதான். ஜாதித்தத்துவம் ஒன்றுதான். ஆனால் வேறு வேறு இடங்களில் உள்ளவர்கள் தங்களுக்கு முன் காணப்படும் மார்க்கங்களின் மூலமாக ஒரே குறிப்பிட்ட இடத்தை அடையத்தான் முயலுகிறார்கள். பல்வேறு இடங்களிலுள்ளவர்களை ஒரே இடத்துக்கு வந்து, பிறகு தான் குறிப்பிட்ட இடத்துக்குப் போகவேண்டும் என்பது எக்காலத்திலும் ஸாத்யமில்லை. பல்வேறு மனோநிலையில் உள்ளவர்களை ஒரேவித மனோநிலையுடன் இருக்கவேண்டுமென்று கட்டுப்படுத்த முடியுமா? அறிவு வளர்ச்சி ஒவ்வொருவரிடமும் வித்தியாசத்துடன் காணப்படுகிறதல்லவா? அதற்கேற்ப மனோநிலைமாறுமல்லவா? இத்தத்துவத்தை மறந்து எல்லோரும் ஒரேமாதிரி நினைக்கவேண்டும், ஒரே மாதிரி அறிவுவளர்ச்சியுடன் இருக்கவேண்டும் என்று நிர்பந்தப்படுத்தமுடியுமா? எல்லோரும் அன்புடன் இருத்தல்வேண்டும் எனக்கூறுவது நியாயம். ஆனால் ஒருசாரார் குறிப்பிட்ட கார்யத்தைச் செய்வதுதான் அன்புக்கடையாளமெனக்கூறுவது சரியாகுமா? எக்கார்யத்தைச் செய்தால் உண்மையாக மனிதஸமூஹத்துக்கு நற்கார்யம் செய்ததாக ஆகுமோ அதுவே அன்புள்ள கார்யமாகும். ஒரே தர்மத்தைப் பின்பற்றவேண்டுமென்பது 'எது தர்மம்' என்று தீர்மானித்த பிறகல்லவோ ஸாத்யமாகும். பண்டைக் காலத்து பழக்க வழக்கங்களைப் பின்பற்றுபவர்களை அடியோடு ஒழிப்பதே தர்மம் எனக்கூறும் ஒருசாரார் தர்மத்தின் தத்துவத்தை நிர்ணயிக்க நாம் அனுமதிக்கவேணுமா?

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய் நமது பாரதநாட்டுப் பண்புக்குத் தக்கதான தர்ம, கர்மாநுஷ்டானங்களுடன் நமது ஸமூஹம் முன்னேறிவந்திருக்கிறது. இந்த ஸமூஹத்தில் சிற்சில விஷப் பூண்டுகள் முளைத்திருக்கின்றன. அவைகளைக் களைந்து எறியவேண்டியது மிகவும் அவசியமே. அப்படிச் செய்வதினால் நமது ஸமூஹம் முன்னேற்றமடையும் என்பதில் ஸந்தேஹமில்லை. அப்படிக்கின்றி பழைய ஸமூஹத்தையே அழித்துவிட்டு புது மாதிரி ஸமூஹமேற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று கூறுவது ஆஸ்திகர்களுக்கு அழகல்ல. ஸமூஹத்திற்கும் நலனை உண்டாக்காது. அதிகமான விஷவித்துக்களை ஸமூஹத்தில் ஊன்றி அதிக களைகளை வளர்ப்பதற்குத்தான் ஆதரவாகும். தீய சக்திகளுக்கு ஆதரவு அளிப்பதாகவும் ஏற்படும். நமது எண்

ணம் நல்லதாக இருப்பினும் இம்மாதிரியான ஓர் க்ஷேமகரமான முடிவை நமக்குக் கொடுக்காது என்பது நிச்சயம். கண்ணுக்குப் புலப்படுவது தவிர வேறு உண்மை இல்லை என்று எண்ணக்கூடியவர்களின் மனோநிலைக்குத் தக்கபடி நமது ஸமூஹத்தை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டுமென்பது உலகத்தினுண்மையான நிலைக்குப் புறம்பானதேயாகும். ஒவ்வொரு சேதனுசேதனத்தின் இஹ பர ஸுகத்துக்குக் காரணமானதே தர்மமெனக்கொண்டு அதன்படி நமது ஸமூஹத்தை அமைத்துக் கொள்ளவேண்டுமேயல்லாது நமது அறிவுக்கு எட்டியதே தர்மம் எனவும் அதன் அடிப்படையிலேயே நமது ஸமூஹத்தை அமைத்துக் கொள்ளவேண்டும் எனவும் கொள்வது கானல் நீரைக் கண்டு களிப்பதுபோலாகும்.

ஸ்ரீ:

பிரசாரம்

“முன்பெற்ற ஞானமு மோகந் துறக்கலு மூன்றுரையிற்
றன்பற்ற தன்மையுந் தாழ்ந்தவர்க் கீயுந் தனித்தகவு
மன்பற்றி நின்ற வகையுரைக் கின்ற மறையவர்பாற்
சின்பற்றி யென்பயன் சீரறி வோர்க்கிவை செப்பினமே.”

(அதிகாரசங்கிரகம்— 39)

வாழ்க்கையென்பது, நித்யப்பிரசார காரணமாய், அனுஷ்டானத் துறையிறங்கி, அனுபவக் கரைமோதி முடிவடையும் ஓர் விசித்ரக் காக்ஷியே. மானிடரியல்பு, தன்னையும், தன்னைச் சார்ந்ததுகளையும் தானே போற்றிப் பிரசுரித்தும், பிறர் போற்றிப் பிரசுரிக்கக் கண்டும் தூண்டியும் மகிழ்வதே. பிரபஞ்சம் பரிமளிப்பது பிரசார காரணமாகவே. நாமறிந்து செய்யும் பிரசாரங்களைவிட, நாமறியாது நடந்தேறும் பிரசாரங்களே நமது வாழ்க்கையை வகுத்திடுவதாம். இத்தகைய பிரசாரம், சொல்லாலும், எழுத்தாலும், செயலாலுமே முக்யமாக நடந்தேருகிறது. பேச்சாலும் எழுத்தாலுமாகும் பிரசாரங்களைவிடச் செயலென்ற அனுஷ்டான சிரத்தையுடன் நடந்தேறும் பிரசாரமே கோரும் பலனளிக்க வல்லது. அனுஷ்டானபரர்களது யோக்யதையையும் சிரத்தையையும் பொறுத்ததேயாகும் அவர்கள் பிறர் மனத்துள் ஊட்டும் உணர்ச்சியாவும். நம்பிக்கையளவும் இதர துறைகளைவிட மதத்துறையிலேயே இதனுண்மை, மிகத் தெள்ளியதாகக் கூடியதாம். உண்மைச் சிரத்தையுடன் ஒருவன் அனுஷ்டிக்கும் குலாசார மதாசாரங்களே பிறர் மனதைக்கவர்ந்திழுத்து அவர்களையும் அவ்வனுஷ்டான வழி புகுத்த வல்ல திடப் பிரசாரமாம். ஆஸ்திக்ய ஆசார அனுஷ்டானுதிகளைக் காணக்காண, வரண்ட நாஸ்திகனும் காலக்ரமத்தில் சிறிது சிறிதாக மனம் மாறி, ஆஸ்திக்யத் துறைகளில் தன்னையுமறியாது இறங்கிப் பயன்பெறுவானென்பது அனுபவ உண்மையேயென்றால், உண்மை ஆஸ்திக்ய சிரத்தையுள்ளவனுக்கு அனுஷ்டானப் பிரசார காரணமாக, வைராக்யமும் நம்பிக்கையும் வேரூன்றி ஓங்கிடுமென்பதில் சந்தேகமுண்டோ?

இவ்வளவு வல்லமை வாய்ந்த பிரசாரம் என்பது, ஓர் அரிய பெரிய கலையே. மிக மிக உயர்தரக்கலையாம் இப்பிரசாரக்கலை. இக்காலத்தில், சுயலாப பூஜாபேக்ஷித காரணமான வெறும் வியாபாரக்கலையாகவே ‘விளம்பரம்’ என்ற பெயருடன் விளம்பரப்படுத்தப்பட்டு ஹிந்து ஆஸ்திகர்களைப்போல் அதன் உண்மைச் சுய உயர்வை இழந்ததாகி நிற்கிறது. நாம், பிரசாரத்தை மறந்து விளம்பரத்தையே விளம்பரஞ்செய்வோமாயினும், பிரசாரம் மட்டும் நம்மை மறவாது, நம்மைப் பிரசாரஞ் செய்து கொண்டே வருகிறது நாமுமறியாது. உலகில், ஒவ்வொரு சிருஷ்டியும், அறிந்தோ, அறியாததோ கணத்துக்குக்கணம், மனோ வாக்

குக் காயாதி சேஷ்டைகளின் காரணமாகத் தன்னையும், தன் குணத்தையும், தன் மதிப்பையும் தானாகவே பிரசுரித்துக்கொண்டே போகின்றது. ஆகவே, பிரசாரமென்பது, பிறவியுடன் பிறந்ததோர் லக்ஷணமே. பிறவி மறையுங்காலே அதன் பிரசாரம் முடிவதாகும். இந்த மர்மமறியாத ஹிந்துக்களாகிய நாம், பிரசாரம் என்ற விளம்பரக்கலை, நாமறியாத புதுக்கலையென்றும், மேனாட்டாரே கண்டறிந்து பலன் பெற்று நமக்குக் கற்றுக்கொடுத்த நன்கொடையென்றுமெண்ணி, எக்கலையிலும் போல, இக்கலையிலும் சுயமதிப் பிழந்து, மேனாட்டார் அடிமையாய் விளங்குகிறோம். நாமறிந்த இக்காலத்திய பிரசாரமெல்லாம், சுதந்திரப்பிரயோஜனமற்ற ப்பராதீனப்பிரசாரங்களே. சுயநம்பிக்கையற்று, பிறர் நம்பிக்கை மிகுந்து, அவர் மனப்பான்மையையே பெற்று நாம் நடத்தும் பிரசாரங்கள், உண்மையில், நம்மை, அவமதிப்புக்கும், அப்பிறரைப் பெருமதிப்புக்கும் இலக்காக்கும் விபரீதப் பிரசாரமேயாகிறது. மேனாட்டார் மனப்பான்மை, பொருட்செல்வத் தேட்டத்தில் ஈடுபடுவதே. ஹிந்துக்களது மனப்பான்மையோ, அருட்செல்வத் தேட்டத்தில் ஈடுபட்டுக்கிடப்பதாம்.

'அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள'

என்று விளக்குகிறார் திருவள்ளுவரும். பொருட்செல்வப் பிரசாரம், தாழ்ந்த மனப்பான்மையையே குறிப்பதாகும். மிருக பல மிகுதியையே பெருக்குவதாகும். அருட்செல்வப் பிரசாரமோ, உயர்ந்த பரந்த மனப்பான்மை பெருக்கி ஆத்மபலம் மிகுப்பதாகும். ஆத்மபலப் பிரசாரமே ஹிந்துமதத் தனிச் சிறப்பு. மிருக பலப் பிரசாரந்தான் மேனாட்டார் விளம்பர விளக்கம். ஹிந்துக்களாகிய நாம், நமது சுய மதாசார குலாசாரப் பண்பாடுகளை மறந்து, இகழ்ந்து, பிரசுரியாது கைவிட்டு, பிறர் மதாசார நாகரீகத்தில் மோகங்கொண்டு, அவற்றையே நம்மது போலேற்றுப் பிரசுரிப்பது என்ன காலத்தின் போக்கு!

'கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதைவிட
கற்பூரம் விற்றுக் கால்பணம் சம்பாதிப்பதே மேல்'

என்றது போன்றதோர் பழமொழி நம் பெரியோர் பகன்றிடக் கேட்டிருக்கிறேன். ஹா! ஹா! அதனுள் பொதிந்து மறைந்து ததும்பும் தத்வார்த்த விளக்கம், இக்காலத்திய ஹிந்துமத ஸமூஹப் பராதீன நிலையைக் காணுங்காலே தெளிவாகிறது. துராசாரத் துறையிறங்கித் துராசாரப் பிரசாரம் வலுக்கச் செய்வதின் விபரீத விளைவையும், சுயாசார நெறிநின்று, சுயாசாரப் பிரசாரஞ் செய்வதால் உண்டாகும் உத்தமப் பலன்களையும், இந்நீதிமொழி, எப்படிச் சொல்லாது சொல்லிக் காட்டிச் சுடச்சுட சுட்டுச் சுட்டு நம் மனத்தை சுத்தி செய்வதாகிறது, சிந்திக்க, சிந்திக்க!. அரசியல் துறையில், சுதந்திரங் கோரித் தியாகங்கள் செய்து சுதந்திரம் பெற்று விட்டதாக நமது பெருமையை நாம் பலவிதங்களாலும் பிரசாரஞ் செய்து வருகிறோம். ஆனால் அப்பிரசார விளைவு, இன்று நாம், உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்கத் துணியுமின்றிப் பிறர் கைபார்த்து ஏங்கி நிற்பதேயாகிறது. ஏன்?. நமது சுய மதாசார குலாசாரக் கலாசாரங்களை யறிந்து, போற்றி, அனுஷ்டியாதிருத்தலே இதன் ரகசியமாம். அரசியலில் சுதந்திரம் பெற்றதாகக் குதூகலிக்கிறோமேயொழிய, மனப்பான்மையில் சுதந்திர மிழந்தேயிருக்கிறோம். மேனாட்டாருக்கே அடிமைப்பட்டு வாழ்க்கை நடத்துகிறோம். அன்னியர் ஆதிக்கம், உண்மையில் நம்மை விட்டபாடில்லை. மேனாட்டார் பிரசாரம் பிறரைத் தனக்கு அடிமைப் படுத்தி ஆள்வது. ஹிந்துக்கள் பிரசாரமோ, லோக ஹிதத்திற்காகத் தொண்டு செய்து, தன்னைப் படைத்த ஈச்வரனொருவனுக்கே தான் அடிமையென்றும் அவன் தவிர்த்த எவர்க்கும் எவரும் அடிமையல்லவென்றதுமான உயர்தர மனப்பான்மை பெருக்கி, உலக சகோதரத்வ அன்பு மதம் பெருகிடச்செய்வதே.

மனிதராய்ப் பிறந்த எவரும், தன்னைப் படைத்த அந்தச் சர்வசக்தன் தவிர்த்த

வேறெவர்க்கும் அடிமைப்பட வேண்டியவரல்லர், நாம் அவன் ஒருவனுடைய சொத்தே யொழிய பிறரெவர்க்கும் சொத்தாக வேண்டியவரில்லை.

“யானறி யுஞ்சுட ராகிநின் றேன்மற்றும் யாது
மலேன்
வானம ருந்திரு மாலடி யேன்மற்றோர் பற்று
மிலேன்
றானமு தாமவன் றன்சர ணேசர ணென்ற
டைந்தேன்
மான மிலாவடி மைப்பணி பூண்ட மனத்தி
னனே”–.
(அமிருதாஞ்சனி–14)

ஆகவே நாம் பிரசுரிக்கக்கடமைப்படுவது அந்த ஸர்வேச்வரனொருவனையே நாமாக அவனை யறியுந்திறன் கொண்டிலோமாதலால், அவனை யறிந்துணர்ந்து அனுபவித்த ஆழ்வாராசார்யர்கள் வகுத்துள்ள நெறி நின்று, நமது குலாசாரங்களைப் பிரசாரஞ் செய்யவும் கடமைப்பட்டவராகிறோம். ஆகவே நம்மைப் படைத்த ஈச்வரனிடத்தும், அவனை நமக்குணர்த்துவிக்கும் நமது குலாசாரியர்களிடத்தும் நமக்கே நம்பிக்கையும் சிரத்தையுமில்லாது போமாகில், பிறர்க்கே அடிமைப் பூண்டொழுகும் கற்றறி மூடர்களாகவே வாழ்வு நடத்துவோமாவோம். நம் நாட்டுப் பழக்கவழக்கங்களைக் கைவிட்டுப் பரிகசிக்கும் உயர்தர உத்யோகஸ்தனானதோர் ஹிந்து இளைஞன், தனது விவாஹ காலத்தில் தன் பிதாவை நமஸ்கரித்திடச் சொல்லப்பட்டானாம். அதற்கவன்– ‘இதெல்லாமென்ன பைத்யக்காரப் பழக்கம்; அவரென்ன செய்துவிட்டார் நான் நமஸ்கரித்திடும்படியாக; ஶாஸ்திரப்படி நாம் ஈச்வரனொருவனுக்கே அடிமையல்லவா’ என்று ஶாஸ்திரஜ்ஞான வியாக்யானஞ் செய்து பிதாவைத் தெண்டனிட மறுத்தானாம். அச்சமயம் அச்சபையில் வந்திருந்த அவனுடன் சம அந்தஸ்து கொண்ட மற்றோர் ஆஸ்திக இளைஞன்– ‘அப்பனே நீ மகா ஶாஸ்திரஜ்ஞன் தான். உன் பிதாவை நீ நமஸ்கரித்திடவேண்டாம். ஆனால், எவரும் செய்திராததோர் தனிப்பெரும் அதிசயத்தை உன் பிதா செய்துள்ளார். அதற்காக, அவரைப் போற்றிப் பணிவது என் போன்றோர் கடன் என்று கூறி, மணமகன் பிதாவின் அடிபணிந்து எழுந்தானாம். இது கண்ட மணமகன், திகைப்புடன், ‘நண்பா! இதென்ன நாடகமாடுகிறாய் நடுச்சபையில்? எவருஞ் செய்யாத என்ன அதிசயத்தை என் தகப்பனார் செய்ததாக விளம்பரஞ்செய்து, எங்களை இப்படிப் பரிகசிக்கிறாய்?’ என்று கேட்டானாம். அதற்கு அவன் நண்பன்– ‘அன்பனே! நான் நடிக்கவுமில்லை. பரிகசிக்கவுமில்லை. தனது மூடத் தனத்தையும் ப்ரயோசன மற்ற தன்மையையும் நன்கறிந்து, தன் பிதா தன் வணக்கத்திற்கு யோக்யதை யற்றவரென்ற அறிவும் ஆற்றலுங்கொண்ட உன் போன்ற அபூர்வ மதியூகியைப் புத்திரனாக பெற்ற அதிசயம், உன் பிதா ஒருவருக்கேயல்லவா ஏற்பட்டிருக்கிறது. நாங்களெல்லாம் ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’ என்ற மூடப்படிப்பைப் பயின்று அனுஷ்டிக்கும் பித்தேறிய புத்திரராயுள்ளோமே என்று கூறினான். இதைக் கேட்டதும் புது மணங்கொண்ட இளைஞனுக்குத் தனது அறியாமையின் அளவு நன்கு தெளிவாகி, தனது நண்பனையே தனது ஆசார்யனாக வணங்கித் தன் பிதாவைத் தெய்வமெனத் தம்பதி சமேதனாகத் தெண்டனிட்டு வணங்கி நின்றானாம். இந்நிலையிலேயே இக்காலத்திய இளைஞர் யாவருமுளர். இதன் காரணம் மேனாட்டு நாகரீக போகம் நம்மைவிட்டகலாதிருப்பதுவே.

நம்மை இதுகாறுமாண்டுவந்த மேனாட்டார்களே தம்மைத் தமது மதப்பற்று மிக்கவரென்றும், பிறமதஸ்தர்களை அவரவர் ஆசாராநுஷ்டானப்படிக்கே விட்டு வளர்க்கும் வேதாந்திகள் என்றும் பிரசுரித்து அரசியல் நடத்திவந்தனர். அவ்வன்னியராட்சி யகற்றி நம்மை ஆளும் நமது ஹிந்து அதிகாரிகளோ, தம்மை மதப்பற்றற்ற ராஜ்யாதிகாரிகளென்றும், நாம் எல்லோரும் ஜாதிமதசமயபேதம் வளர்க்கும் பித்தர்களென்றும், புராதன ஹிந்துமதக்குலாசாரங்களை யநுஷ்டிப்பது அறிவீனமென்றும் பிரசாரம் தொடர்ந்து நமது சுய குலாசார

மதாசார அநுஷ்டானவிதிகளைக் கண்டித்தும்
பேதித்திடும்வகையில் நம்மைத் தண்டித்திடும்
சட்டங்களை யுண்டாக்கியும் வருகிறார்களே!
இதுவா ஹிந்துக்கள் ஹிந்துக்களை ஆளவேண்
டிய ரீது. நமது குலாசாரா நுஷ்டானமுறை
களில் அந்நியர் கொடுத்த சுதந்திரங்கூட நம்
மவர் கொடுத்திட மறுத்திடுகிறார்களே! தமிழ்
இலக்கணத்தில் 'மங்கலம்' என்று வழங்குவது
போன்றதோர் அடைமொழியோ தானோ
இன்று நாம் பெற்றுள்ள சுதந்தரம்? மேனாட்
டார் மதத்துள்ளும் ஜாதி சமயபேத சச்சரவு
களில்லையா! இன்னும் ஆங்கிலமன்னன் 'மதப்
பாதுகாப்பாளன்' (Defender of the faith)
என்ற பிருதேற்று, தன் மதங்காக்கும் புனித
னெனப் போற்றிப் பிரசுரித்துக் கொள்ள
வில்லையா தன்னை? ஹிந்து அரசுமட்டுமேனோ
மதப்பற்றற்றதாகவேண்டும்? இதுவிஷயம்நாம்
சிந்தனை தேக்கித் தகுந்த முறையில் பிரசார
மெழுப்பவேண்டாமா இனியாவது? ஒருவனை
ஆளாக பிறர் மதிப்பிற்கிலக்காக்குவது அவ
னது மதாநுஷ்டான சிரத்தையே. ஒரு
ஸமூஹத்தை உலகறிய உயற்றிப் போற்றுவிப்
பது அச்சமூஹத்தாரின் மதப் பிரசார
வேகமே. ஒரு நாட்டை வெற்றிக்கொடிபரப்பி
விளங்கிடச் செய்வது அதை ஆள்வோரின்
மதப்பற்றின் திடமே. மதப்பற்றற்றதெது
வும் மதிப்பற்றதேயாகுவதாம்.

சுயமதப் பிரசாரத்தால் பிறமதத்துவேஷம்
பெருக்குவோராகிறோமென்று வாதம்
பெருக்கி, நமதுசுயமதாசாரா நுஷ்டானங்களை
நாம் மறந்திடப் பிரசாரஞ் செய்து வருகின்ற
னர் நமது மதத்துவேஷிகள் பலர். நம்மினரு
ரும் இந்தத் துஷ்பிரசாரத்தில் மதி மயங்கி,
தமது புராதன சுய மதாசார குலாசாரங்களை
யெல்லாம் கைவிட்டு, முகம்மதியர் மதத்திலும்
கிரிஸ்தவ மதத்திலுமுள்ள முக்யாம்சங்களை
யடிப்படையாகக் கொண்டு, புத்த ஜைனாதி
மதங்களின் சதாசாரக்கொள்கைகளை மட்டுமே
கோர்த்து ஓர் பொது உலக மதம் உண்டாக்
கப் போவதாகப் பிரசாரஞ்செய்து, ஆஸ்திக்ய
ஹிந்துக்களை அவதிப்படுத்தியும் வருகிறார்கள்.
இதர மதஸ்தினரெவரும் தத்தம் மதக்கொள்
கைகள் மூடநம்பிக்கைகளென்றோ, பண்பாடற்
றவையன்றோ, அநாகரீகக் கொள்கைகளெ
னவோ பிரசாரஞ் செய்து வரக்காணோம். அம்
மதங்களுக்கும் முந்தியதாயும் எம்மதத்திற்
கும் தாய்மதமாயுமிருந்து வரும் நமது ஆதி
ஹிந்து மதத்தை மட்டும், அதன் மக்களே
பழித்து உருவற்றதாக்க முன் வரவேண்டிய
பரிபவ நிலையை நம்முள் எவரும் எள்ளள
வேனும் இன்னமும் எண்ணுவாரில்லையே!
ஹிந்துமத தத்வங்களை எல்லாமத தத்வங்களை
யும் விட விஞ்ஞானவகைத்ததெனவும், சிருஷ்
டிக்கும் முடிவுக்கும் புத்திக்குகந்த காரண
காரணங்களை விளக்குவதெனவும் மேனாட்டார்
களே யுணர்த்தி, நமது மதவாராய்ச்சியிலிறங்
கிப் பலன் பெற்று வருகின்றனரே! இந்நிலை
யில் கற்றறி மூடர் என்பதற்கு இக்காலத்திய
ஹிந்துக்களைவிட வேறெவ்வித சிறந்த லக்ஷணங்
காட்டும் உதாரணமும் இனி இருக்கக்கூடுமா?
தன்னிடமும், தன் பெரியோரிடமும், தன்
சுய மதத்திலும் நம்பிக்கையும் சிரத்தையுமில்
லாத இந்த அனுஷ்டான ஹீனர்களா பிறர்
மனத்தில் ஆஸ்திக்யமுண்டாக்கிப் புகுத்த
வல்ல சமூகத்தொண்டர்களோ தலைவர்களோ
ஆகவல்லவர்கள்? தன் மத முடிவு கண்டறிந்த
மகான்களல்லவா பிறமத ஆராய்ச்சியிலிறங்கும்
யோக்யதை கொண்டவராவர். தன்மத முடிவு
கண்டறியும் வரை, தனது குலாசாரங்களை
யனுஷ்டித்து, மதாசாரியன் செய்யும் உபதே
சம் பெற்று, அனுஷ்டான நெறிநின்று, சுய
மதப் பிரசாரஞ் செய்தல்லவா கற்ற கலைகளின்
கசடற்ற பலன்! திருமழிசைப் பிரானும்
ஸ்ரீராமகிருஷ்ணபரம ஹம்ஸரும், பிறமதக்
கொள்கைகளைப் போற்றினர்களே யென்று
பிரசுரித்துவரும் நம்மத மூடர்கள் மதியை
என்னென்பது? அம்மஹான்கள், ஒவ்வொரு
மத முடிவையும் நன்கு கண்டு, முடிவில் நமது
ஹிந்து மதமே எதனினும் சிறந்ததென்ற
முடிவுக்கு வந்து, அதையே பிரசாரஞ்செய்து,
அதை வலுத்திடச் செய்யவே அதனின்றும்
பிற மதத்தார் எடுத்துக்கையாண்டு வரும் பிற
மதச் சிறப்புக்களை நமக்கு எடுத்துக்காட்டுவா
ராயினர். இவ்வுண்மை அவர்களே கூறியொப்

பியதாயிருக்க, நவீன ஹிந்துக்கள், அம்மஹான்களைப் போலவே தம்மையெண்ணித் தலைமை பூண்டு, சுயமத வதமும், பிறமதப் பிரசாரமும் செய்வது, 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானுமதுவாகப் பாவித்துத் தன் பொல்லாச் சிறகை விரித்தாடியது' போலே தான். மேனாட்டார் நடை, யுடை, பழக்க நாகரீகங்களை நாம் கைவிட்டு நமது புராதன சுய உடை, நடை பழக்க வழக்கங்களை மேற்கொண்டு, பிறரறியப் பிரசுரித்திட முன் வருங்காலே நாமும், நம் நாடும், நம் மதமும், சுகமும் சுபிக்ஷமும், சுய மதிப்பும் பெற்றோங்க வழி ஏற்படுவதாகும்.

கைவிளக்கை விட்டு, இருட்டில் புகுந்து, பிறவெளிச்சந்தேடித்திரிகிறவராகிறோம் மதப் பற்றற்ற சமூஹம், குரங்கின்கைப் பூமாலை பெறும் சுகமே பெறுவதாம். சுய மதஸ்தாபன முயற்சிகளுக்கான பிரசாரங்கள் எவர்க்கும் மிக மிக அவசியமே. இஷ்ட தேவதா பூஜையே துஷ்ட சகவாசமகற்றி, கஷ்ட நிவர்த்திகள் செய்து, லோக ஹிதத்தைப் பெருக்குவதாம். பல சமயங்களைப் பெருக்கி வளர்ப்பதே ஹிந்துமதத்தின் தனிப் பெருமை. ஒரே ஈச்வரனிடத்தில் திட நம்பிக்கையும், அவனை யறிந்தடைந்தனுபவித்த சமயாசாரியர்கள் காட்டியுள்ள வழிகளை சிரத்தையுடன் அனுஷ்டித்துப் போகவேண்டுமென்பதுவுமே எம்மத சமயமும் சம்மதத்துடன் பிரசாரஞ் செய்வதாகிறது. எந்தத் தெய்வத்தை எப்படி யெப்படி ஆராதிப்பதால் என்னென்ன பலன் பெறக்கூடுமென்ற அனுஷ்டானக் கிராமங்களில் தான் சமய பேதங்கள் ஏற்படும். இதன் காரணம் ஈச்வர ஸந்நிதானஞ்சேர அந்தச் சமயாசார்யர்கள் பற்றிப்போன வழிகள் பல இருப்பதுதான்.

'துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
தொல்வழியே நல்வழிக டுணிவார்கட்கே'

என்றும்,

'.................. ..இவர்கள் மகிழ்ந்து பாடுஞ்
செய்யதமிழ் மாலைகளாந் தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்க டெளிகின்றோமே'

என்றும் முறையிடுகிறாரே நமது ஆசார்ய வள்ளல்! குலாசாராநுஷ்டான அவச்யத்திற்கும், சுயமத ஸ்ரீகோஶபாராயணம்பற்றியும் இதைவிடச் சிறந்த ப்ரசாரமுண்டோ?

தெய்வத்தைக்காட்டுவோர் சமயாசார்யகளே. இவர்களது ஆசாராநுஷ்டானங்களே சமய ப்ரசாரமாக விளங்கும் கருவியாம். எவ்வித ப்ரதிப்ரயோஜநமும் கோராது, உலகோருய்யவேண்டுமே யென்ற அனுதாப உதார குணத்தோடு தத்தம் சமயாசாராநுஷ்டானங்களைத் தம்மை ஆஸ்தையுடன் அண்டினோர்க்கு உபதேசித்து வழங்கிவருகின்றனர் ஹிந்துமத ஆசார்ய வள்ளல்கள். 'கன்றேன நம்மை யெண்ணிக் கரக்குஞ் சுரபிகள்' இவ்வாசார்யோத்தமர்கள். வேதவெளிச்சத்திலிருந்து ஜ்ஞானச்சுடரேற்றி நமது மதம் அணையாது பரம்பரையாகப் பாதுகாத்துப் ப்ரசுரித்துவரும் பரம ஔதாரிகள் நமது சமயாசார்யர்கள்.

"மருளற்ற தேசிகர் வானுகப் பாலிந்த வையமெல்லா
மிருளற் றிறைவ னிணையடி பூண்டு யவேன்னுதலாற்
றெருளுற்ற செந்தொழிற் செல்வம் பெருகிச் சிறந்தவர்பா
லருளுற்ற சிந்தையி னாலழி யாவிளக் கேற்றினரே"

(அதிகாரசங்கிரகம்— 37)

இப்படிக்கு ஆசார்யசிஷ்ய பரம்பரையாக ஓதியுணரப்பட்டுவரும் ஆஸ்திக்ய ப்ரசார காரணத்தினாலேயேதான் நமது ஹிந்துமதம் எவ்வளவோ எதிர்ப்புக்களையும் எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு மேலாகத் தங்கி நின்று இன்றுங் கெடாது ஆலவ்ருக்ஷம்போல பல சமய சம்பிரதாய விழுதுகள் விட்டுத் தழைத்தோங்கி வளர்ந்து செல்வதாகிறது. வேத தீபத்திலிருந்து சுடரெடுத்துப் பரவிவரும் நமது ஸம்ப்ரதாய தீபங்கள் என்றும் அணையா விளக்குகளே. அதைப் ப்ரசுரித்தோருக்கு ஒளிந்து வழிகாட்டும்; ப்ரசுரியாது புரக்கணிப் போரை இருள்தருமாஞாலத்துள்ளேயே அழுத்தி அல்லலுறுத்தி வரும்.

(தொடர்ச்சி 237-ம் பக்கத்தில்)

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸ்ரீ கிருஷ்ணன்— என்ன சொல்லுகின்றாய்? வீதி உத்ஸவமா? அதற்காக உங்களோடு நானும் வரவேண்டுமா?

நாயகப்பெண்— ஆமாம் கிருஷ்ணா, மார்கழி நீராட்ட உத்ஸவம் வீதி உத்ஸவந்தான். நீ அவச்யம் எழுந்தருளவேண்டும். தைவமில்லாமல் யாருக்கு உத்ஸவம் பண்ணுவது?

ஸ்ரீ கிருஷ்ணன்— ஏதேது. நீ மிகப்பெரிய மனுஷியாயிருக்கின்றாய். மிகப் பெரிய உத்தேசங்கள் வைத்துக்கொண்டிருக்கின்றாய். வீதி உத்ஸவம் நடத்துவதென்றால் அது எவ்வளவு பெரிய கார்யம். குழப்பமில்லாமல், தடுமாற்றமில்லாமல், எல்லாம் ஸரியாக நடக்க வேண்டுமே. முதலில் ஊர்வலத்தில் இவரிவர் இப்படி இப்படி நிற்கவேண்டுமென்று தீர்மானித்து அதன்படி நிற்கச் செய்து அதற்குப் பிறகு புறப்பட்டுப் போகவேண்டும். இதையெல்லாம் யார் நிர்வஹிப்பது?

நாயகப்பெண்— எம்பெருமானே, எல்லாவற்றையும் நீ தான் நிர்வஹிக்கவேண்டும். உன்னைத் தவிர வேறு யார் எங்களுக்கு இருக்கின்றார்கள். ஊர் வலத்தில் அவரவர் நிற்க வேண்டிய க்ரமத்தை சங்குகள் முதலிய வஸ்துக்களைக் குறிப்பிடும் க்ரமத்தினாலேயே நான் ஸூசனம் செய்திருக்கின்றேன். எல்லோருக்கும் முன்னே சங்கு கோஷ்டி. அதற்குப் பின்னால் பறை கோஷ்டி. அதற்குப்பின் பல்லாண்டு கோஷ்டி. இந்த மூன்று கோஷ்டிகளும் முன் செல்ல இரண்டு பக்கங்களிலும் மங்கள தீபங்கள் ஏந்தப்பட்டு விளங்கும். இவற்றுக்குப் பின் கொடிகள். இவற்றுக்குப் பின் விதானமென்கிற மேல் கட்டியை பலர் தூக்கிப் பிடிக்க அதன் கீழ் நீ எழுந்தருளியிருக்கவேண்டும். இந்த வரிசையில் ஊர்வலம் நடப்பது வழக்கம். உனக்குப் பின் நாங்கள் பாடி பஜநம் பண்ணிக்கொண்டு வருவோமென்பது சொல்லாமலே விளங்கும்.

27. கூடாரை

அர்ச்சா விக்ரஹங்களை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு நாம் இப்போது எம்பெருமானுடைய உத்ஸவங்களை நடத்துகின்றோம். அந்த ஸ்தானத்தில் ஸ்ரீ கிருஷ்ணனை வைத்து எழுந்தருளப் பண்ணிக்கொண்டு நீராட்ட உத்ஸவத்தை நடத்த விரும்பினார்கள் கோப குமாரிகள். கீழ் விவரித்தபடி ஸ்ரீ கிருஷ்ணன் திருமாளிகையிலிருந்து புறப்பட்டு வாத்ய பாராயண பஜந கோஷங்களுடன் வீதிவலமாகச் சென்று யமுனையாற்றுக்குப் போய் அதன் கரையில் புண்ய கட்டத்தில் ஸங்கல்பம் பண்ணிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அந்த ஸமயத்திற்கேற்ற ஸகல உபசாரங்களையும் செய்து அவனுடன் நீராடி அதன் பிறகு முன்போலவே வீதிவலமாக அவனுடைய திருமாளிகைக்குச் சென்று அங்கு அவனோடு கூடவே இருந்து அந்தந்த ஸமயத்திற்கேற்ற உபசாரங்களைச் செய்து மற்ற பொழுதெல்லாம் அவனுடைய கல்யாணகுணங்களையும் திவ்ய லீலைகளையும் பாடி பஜநம் பண்ணிக்கொண்டே இருந்து தமது நோன்பை முடிக்கக் கருதினார்கள். இந்த விவரங்களையெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் விண்ணப்பம் செய்தார்கள். தன்னையடைந்தவர்கள் எப்படியெப்படி விரும்புகின்றார்களோ அப்படியப்படித் தன்னை ஆக்கி அவர்களுக்குத் தரும் ஸ்வபாவமுள்ளவனாகையால் எம்பெருமான் கோபகந்யகைகள் இஷ்டப்படி எல்லாவற்றையும் செய்வதாக அங்கீகரித்தான். அவ்வளவேயன்றி அவர்கள் விஷயத்தில் உண்டான அளவு கடந்த ப்ரேமத்தினால் மற்றொன்றும் செய்யக் கருதினான்.

கடோபநிஷத்தில் நசிகேதஸ் என்ற ஒரு சிறு ப்ராஹ்மணப் பையனுடைய உபாக்யானம் ஒன்று கூறப்பட்டிருக்கின்றது. அவனது பிதா கோபித்துக்கொண்டு ‘உன்னை யமனுக்குக் கொடுத்தேன், போ அங்கே’ என்றார். நசிகேதஸ் அப்படியே யமன் வீட்டிற்குச் சென்றான். யமன் எங்கோ போயிருந்தான். திரும்பி வருவதற்கு மூன்று நாளாயின. யமனைப் பார்க்காமல் சாப்பிடுவதில்லை என்று உறுதி கொண்டு நசிகேதஸ் அந்த மூன்று நாளும் பட்டினி கிடந்தான். திரும்பி வந்த யமன் அதை அறிந்து மிகவும் வருந்தி நசிகே

தஸ்ஸைப் பார்த்து "ஐயோ, மூன்று நாள் நீர் பட்டினி கிடக்கும்படி செய்து நான் மஹா பாவி ஆய்விட்டேன். அதற்கு ப்ரதியாக மூன்று வரங்கள் கொடுக்கின்றேன். கேட்டுப் பெற்றுக்கொள்ளும்" என்றான். அவற்றில் முதலாவதாக 'என்னுடைய பிதா மனக்கவலை சிறிதுமில்லாமல் என்னிடத்தில் ப்ரீதராய் இருக்கும்படி அருள்' என்று கேட்டு அதைப் பெற்று இரண்டாவதாக வேள்வி ஸம்பந்தமான 'சயநம்' என்கிற வெகு கடினமான ஒரு விஷயத்தை உபதேசிக்கும்படிக் கேட்டான். யமன் அதை உபதேசித்தான். புத்திமான்களும் தடுமாறும்படியான அந்த அரிய விஷயத்தை ஒரு தடவை உபதேசித்த மாத்ரத்தாலேயே நசிகேதஸ் நன்றாக அறிந்து கொண்டான். ஒரு சிறு தவறுமில்லாமல் அப்படியே திருப்பிச்சொல்லிவிட்டான். யமனுக்குப் பரம ஸந்தோஷம். இவர் மாதிரியன்றோ மாணாக்கர் இருக்கவேண்டுமென்று கொண்டாடினான். உள்ளடங்காத மகிழ்ச்சிக்குப் போக்குவீடாக நசிகேதஸ் மூன்றாம் வரத்தைக் கேட்பதற்கு முன்னேயே அவனுக்கு ஒரு பரிசு வழங்க விரும்பினான். விலையுயர்ந்த ரத்நஹாரம் ஒன்றை எடுத்து அவன் கழுத்தில் போட்டான். இப்பொழுது நாட்டு நலத்திற்காகப் பாடுபட்டுப் புகழ் பெற்ற பெரியோர்களின் பெயரைக்கொண்டு வீதி முதலானவற்றுக்குப் பெயரிடுவதுபோல் தான் அவனுக்கு உபதேசித்த 'சயன'த்திற்கு அவன் பெயரைக் கொண்டு 'நாசிகேதம்' என்ற பெயரிட்டு அதற்கு அப்பெயரே வழங்கிவரும், என்றும் அநுக்ரஹம் செய்தான். இப்படிப் பெரியோர்கள், தம்மைச் சார்ந்தவர்கள் எதை விரும்பிக் கேட்கின்றார்களோ அதைக் கொடுப்பதுமட்டுமன்றி அவர்களிடத்தில் ப்ரேமம் அதிகமானபோது அவர்கள் கேட்காமலே தாமாகவே வெகுமதி கொடுப்பார்கள். இது ஸம்மானமெனப்படும். இவ்விதமாகவே ப்ரக்ருதத்தில் சீர்மல்குமாய் பாடி செல்வச் சிறுமிகளுடைய ரூபம் குணம் வேஷம் பேச்சு இவற்றின் அழகினாலே அவர்களிடத்தில் கரைபுரண்ட அன்பும் அநுக்ரஹமும் கொண்ட ஸ்ரீ கிருஷ்ணன் "பெண்ணே, நீங்கள் அபேக்ஷித்த வஸ்துக்களைத் தருகின்றேன் என்று முன்பே சொல்லிவிட்டேன். இனி உங்களுக்கு ஸம்மானமாக நானே ஒன்று தர உத்தேசிக்கின்றேன். ஆனால் அது உங்களுக்கு த்ருப்திகரமாய் இருக்கவேண்டும். உங்கள் மனதுக்குப் பிடிக்காததை நான் கொடுப்பதால் என்ன ப்ரயோஜனம்? ஆகையால் அந்த ஸம்மானம் எதுவாயிருக்கலாம் என்பதை நீங்களே சொல்லுங்கள்" என்றார்.

கிருஷ்ணனுக்கு இப் பெண்களிடத்திலும் இப் பெண்களுக்குக் கிருஷ்ணனிடத்திலும் ப்ரேமம் மேல்மேலும் வ்ருத்தியாகிக் கொண்டே வந்தது. தாங்கள் விரும்பிக் கேட்டதையெல்லாம் கொடுக்க ஸித்தமாயிருப்பதன்றி மேல் பரிசு ஒன்றும் கொடுக்கவேணுமென்று எம்பெருமான் திருவுள்ளம் பற்றியிருப்பதை அறிந்த அப்பெண்களுடைய உள்ளம் பூரித்தது. எவ்வளவு அநுக்ரஹம் கிருஷ்ணனுக்குத் தங்களிடத்தில் என்று வியந்தார்கள். இந்நிலைக்குத் தக்கபடி எல்லாப் பெண்களுக்கும் ப்ரதிநிதியாக நாயகப் பெண் கை கூப்பி விண்ணப்பம் செய்தாள்.

எம்பெருமானுடைய நாமங்களைச் சொல்லுவதில் இவர்களுக்கு ருசி அதிகம். ஆகையால் நாயகப்பெண் தான் செய்யும் விண்ணப்பத்திற்கு முன் ஒரு திருநாமத்தைச்சொல்லி பகவானை ஸம்போதனம் பண்ணக் கருதினாள். இந்த ப்ரகரணத்தில் அது எந்தத் திருநாமமாயிருக்கலாமென்ற ஆலோசனை உண்டாவது ஸஹஜம். நந்தகோகுலத்திலும் ப்ருந்தாவனத்திலும் ஸ்ரீ கிருஷ்ணன் செய்தருளிய அத்புத வ்யாபாரங்களையெல்லாம் ஆதிமுதல் ஒவ்வொன்றாக அந்தந்த ப்ரகரணத்திற்கேற்றபடி கீர்த்தனம் செய்து வருகின்றாள். அதை அநுசரித்து இங்கும் ஒன்றைக் குறிப்பது உசிதம். உத்தேசித்த முறையில் நடக்கின்ற பகவத் ஸேவை முடியும் ஸமயம் வந்து விட்டதென்பதும் தோன்றிற்று. ஆகையால் இப்போது கீர்த்தனம் பண்ணும் சம்பவம் வெகு சிறந்ததாகவும் முடிவுக்கேற்றதாகவும் இருக்கவேண்டுமென்று நாயகப்பெண் கருதினாள். தவிரவும் தானே ஒரு ஸம்மானம் கொடுப்பதாக ஸங்கல்பித்து அவ்வளவு வாத்ஸல்யத்தைத் தம்மிடத்தில் காட்டிய எம்பெருமானுக்கு அப்போதே வாசிகமாகவாவது ஓர் உபசாரம் பண்ண வேண்டுமென்றும் நினைத்தாள்.

ஸ்ரீ கிருஷ்ணன் சிறு பிராயத்தில் செய்தருளின அத்புத லீலைகளில் மிகப்பெரிது

கோவர்த்தன பர்வதத்தை எடுத்து கோக்களையும் கோபர்களையும் காத்தது. இது கீழ் 'குன்று குடையாவெடுத்தாய் குணம்போற்றி' என்று கூறப்பட்டது. இந்த திவ்ய லீலையில் இன்னொரு விசேஷமுண்டு. கோபர்கள் இந்திரனுக்கென்று பூஜையை ஆரம்பித்தார்கள். இந்திரனுக்கும் மேல்பட்ட ஸர்வேச்வரன் ஒருவன் இருக்கின்றான். உலகத்தோர் செய்யும் எல்லாப் பூஜைகளையும் அவனே ஏற்றுக் கோரின பலன்களைத் தருகின்றான்'' என்ற இந்த உண்மையை அப்போது ஸ்ரீ கிருஷ்ணன் கோபர்களுக்கு உபதேசித்தார். அதோடு இந்திரனுக்கும் ஒரு பாடம் கற்பிக்கக் கருதினார். ஸர்வேச்வரனுடைய அநுக்ரஹத்தாலேயே தனக்கு அதிகாரம் கிடைத்திருக்கின்றதென்பதை முற்றிலும் மறந்து தானே மூன்று உலகங்களுக்கும் ஸ்வதந்த்ர அதிபதி என்பதாக அவன் அஹங்காரப்பட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய இந்த கர்வத்தைப் போக்கி விவேகத்தை உண்டாக்கவேண்டும் என்றும் எண்ணி பகவான் இந்த்ர பூஜையைத் தடுத்தார். அப்போது இந்த்ரன் தன் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்திருந்தால் "ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பப்படி எல்லாம் நடக்கின்றது. இப்பொழுது கோபர் செய்யும் பூஜை என் பூஜையாக இருக்கவேண்டாம். ஸாக்ஷாத் தன் பூஜையாக இருக்கவேண்டும் என்று அவன் திருவுள்ளம் பற்றுகின்றான். அப்படியே இருக்கட்டும். அதனால் எனக்கென்ன குறை. நானும் அவனையேயன்றோ பூஜிக்கின்றவன்." என்றிப்படி எண்ணிப் பேசாமல் இருந்திருக்கக்கூடும். இப்படிப் பேசாமல் இருந்திருந்தால் அவன் பகவானோடு கூடினவன் ஆவான். கூடுவதாவது உடன் பட்டிருப்பது. பகவான் செய்யும் கார்யத்தில் இப்படி உடன் பாடில்லாமல் "பார், இப்பொழுதே கோபர்களையும் அவர்களுடைய செல்வமான கோக்களையும் த்வம்ஸம் செய்து விடுகின்றேன்" என்று கோபாவேசத்தோடு அவர்களை அழிக்கப் புகுந்தபடியால் இந்த்ரன் பகவானோடு கூடாதவனாக ஆனான். ஸ்ரீகிருஷ்ணன் கோவர்த்தன பர்வதத்தை எடுத்து ஏழு நாள் குடையாகப் பிடித்து இந்திரனுடைய விபரீதச் செயல்களை வீணாக்கி அவனை வென்றார். கர்வம் நீங்கி அவன் வந்து அடிதொழுது அபராதங்களை க்ஷமிக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்ததன்றிக் காமதேனுவோடு கூட விருந்து கங்கா ஜலத்தினால் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அபிஷேகம் பண்ணிவைத்து 'கோவிந்தன்' என்ற திருநாமத்தையும் சாற்றினான்.

கோவிந்தன் என்ற திருநாமம் முன்பே எம்பெருமானுக்கு உண்டு. அதன் அர்த்தம் பல விதம். பூமிப்பிராட்டியைப் பத்னியாக அடைந்தவன். ஹிரண்யாக்ஷன் அபஹரித்துக் கொண்டு போன பூமியை மீட்டுக்கொண்டு வந்தவன். நிரதிசயாநந்தமான ஸ்ரீ வைகுண்டத்திலே நித்யவாஸம் பண்ணுகின்றவனாகிலும் பரித்ராணாய ஸாதூநாம் என்றபடி அவ்வப்போது இந்தப் பூலோகத்தில் வந்து அவதரிப்பவன். வேத ரூபமான வாக்கு முழுவதும் தனது ஸ்தோத்ரமாக அமையப்பெற்றவன். என்றிவ்வாறு பல வர்த்தங்கள் அதற்குக் கூறுவர். ஆனால் இந்த்ரன் செய்த பட்டாபிஷேகத்தின் போது 'கோக்களை மேய்த்து வளர்த்து அவற்றோடு ஸர்வகாலமும் பழகிக் காப்பாற்றுகின்றவன்' என்ற இப்புது அர்த்தத்தை கோவிந்தன் என்கிற சொல் பெற்றது.

இப்படி இந்த்ரன் ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் செய்த கோவிந்த பட்டாபிஷேகத்தைக் குறிப்பிட்டு அதனால் அப்போது ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுக்குத் தாங்களும் ஒரு பட்டாபிஷேகம் பண்ணுவதாக ஸூசநம் பண்ணி மிகத் தாழ்ந்தவர்களிடத்திலும் அவனுக்குள்ள வாத்ஸல்யத்தை வெளிப்படுத்துகின்ற கோவிந்த நாமத்தையும் உச்சரித்து 'கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா' என்றுஸம்போதநம் பண்ணினாள்

ஸ்ரீ கிருஷ்ணன்— என் பெண்ணே, என்ன சொல்லுகின்றாயோ சொல்.

நாயகப்பெண்— அபார க்ருபையினால் நீ எங்களுக்குக் கொடுப்பதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கும் சம்மானத்தை அவச்யம் யாம் பெறுகின்றோம்.

ஸ்ரீ கிருஷ்ணன்—ஸந்தோஷம். ஆனால் 'பெற்றுக்கொள்ளுகின்றீர்களா? மாட்டீர்களா' என்று நான் கேட்கவில்லை. நான் கொடுக்க உத்தேசித்ததை நீங்கள் நிராகரிப்பீர்கள் என்ற ஸம்சயம் எனக்குக் கிடையாது. அந்த ஸம்மானம் எதுவாயிருக்கலாமென்று உங்களைக் கேட்டேன். அதற்கு மறுமொழி வேண்டும்.

நாயகப்பெண்— கோவிந்தா, அதற்கு மறுமொழி கூறுகின்றேன். ஆனால் அதற்கு முன் ஒன்று சொல்லவேண்டியிருக்கின்றது. உன் தன்னைப் பாடிப் பறைகொண்டு யாம் பெறு சம்மானம். இது வரையில் நாங்கள் உன்னைப் பாடினோம். இதனால் களிப்புற்ற நீ நாங்கள் விரும்பிய பறை முதலிய வஸ்துக்களைக் கொடுப்பதாய் அங்கீகரித்துவிட்டாய். இந்த வஸ்துக்களைப் பெற்று அதன் பிறகு நீராட்டம் முதலியவற்றைச் செய்து இன்று முழுதும் நோன்பு நோற்கப் போகின்றோம் என்பதும் விஜ்ஞாபிக்கப்பட்டது. 'பறை தருதியாகில் திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து' என்று நோன்பின் பலமும் முன்பே விசதீகரிக்கப்பட்டது. ஆகையால் இப்போது பறைகொண்டு மேல் காரியங்களை நடத்தி இன்று முழுதும் சென்ற பிறகு நாளைக்குப்பெறவேண்டியதாகவே அந்த ஸம்மானத்தை நாங்கள் விரும்புகின்றோம்.

ஸ்ரீ கிருஷ்ணன்— அப்படியே ஆகட்டும். உங்களிஷ்டப்படி. எல்லாம் நடைபெறவேண்டுமென்பது தானே என்னுடைய விருப்பமும். மேல் என்ன ஸம்மானம் வேண்டுமென்பதைச் சொல்.

நாயகப்பெண்— இதோ சொல்லுகின்றேன் கிருஷ்ணா. நாளைக்குப் பொழுது விடிந்ததும் குளித்து மலரிட்டுக் குழல் முடிந்து கண்களுக்குமையிட்டு ஆபரணங்களை அணிவோம். அணியும் ஆபரணங்களில் சிலவற்றைச் சொல்லுகின்றேன், கேட்டருள்வாய். கைக்கு வளை, தோளுக்கு வங்கி, காதுக்குத் தோடு, காதின் மேல் பூ. காலுக்குப் பாதஸரம் இவை முதலானவற்றை அணிவோம்.

ஸ்ரீ கிருஷ்ணன்— (மந்த ஹாஸத்துடன்) பெண்ணே, உன் பேச்சில் ஏதாவது ஒரு குற்றம் கண்டுபிடிக்கவேண்டுமென்று எனக்கு மிகுந்த ஆசை. கவனித்துக் கவனித்துப் பார்த்து வருகின்றேன். இதுவரையில் ஒன்றும் காணமுடியவில்லை. இப்போது அகப்பட்டுக்கொண்டுவிட்டாய். பல வஸ்துக்களைக் குறிக்கும்போது ஒரு வரிசை இருக்கவேண்டும். பேசக் கற்றவர்கள் இவ்விஷயத்தை ஒருகாலும் மறக்கமாட்டார்கள். நீ இப்பொழுது பல ஆபரணங்களைக் குறித்தாய். அதில் கர்ணாபரணம் முதல் பாதாபரணம் வரை என்றாவது பாதாபரணம் முதல் கர்ணாபரணம் என்றாவது வரிசை இருக்கவேண்டும். அதை விட்டு ஹஸ்தாபரணத்திலிருந்து ஆரம்பித்து செவிப்பூ வரையிலும் மேல் மேல் சென்று பிறகு திடீரென்று அங்கிருந்து பாதஸரத்திற்கு வந்திருக்கின்றாய். இது குற்றந்தானே.

நாயகப்பெண்—(புன் சிரிப்புடன்) கிருஷ்ணா, இன்னும் பரீக்ஷை முடியவில்லை என்று தோன்றுகின்றது. எங்கள் பேச்சில் குற்றமிராமல் ஒன்று இருந்தால் அது ஆச்சர்யமேயன்றி குற்றமிருப்பது ஆச்சர்யமன்று. ஆனால் அதைப்பற்றி எங்களுக்கு என்ன சிந்தை? நீ எங்களிடத்தில் பூர்ணம் அநுக்ரஹம் செய்திருக்கின்றாய். உன்னிடத்தில் வந்து நேராகப் பேசும் பாக்யம் கிடைத்திருக்கின்றது. தோன்றினபடி பேசுகின்றோம். அதனால் நீ களிக்கின்றாய். இந்த உத்தேசம் நிறைவேறும்போது மற்றவிஷயங்களிலெங்கள் புத்திஎன்செல்லும். ஆகிலும் ஒன்று விஜ்ஞாபிக்கின்றேன், கேள்.

பெண்களுக்குத் தனித்த வாழ்வு என்பது பெருங்கேடு. அது சாஸ்த்ரத்திற்கும் ஒத்ததன்று, லோகத்திற்கும் ஒத்ததன்று. தகுந்த கணவனை அடைந்து அவனோடு வாழ்க்கை நடத்துவதே அவர்களுடைய தர்மம். கணவனை அடைவது விவாஹத்தினால். அந்த விவாஹத்தில் நடக்கும் க்ரமத்தைத் அநுஸரித்து இங்கு ஆபரணங்களைக் குறிப்பிட்டேன். முதலில் மணமகன் கன்னியின் கையைப் பிடிப்பான். பிறகு பக்கத்தில் நின்று தோளினால் தோளைத் தீண்டுவான். பிறகு மெதுவாகக் கடைக்கண்ணால் பார்ப்பான். அப்போது கன்னியின் காது தோட்டினாலும் பூவினாலும் விளங்குவதைக் காண்பான். பிறகு அம்மி மிதிக்கும்போது காலைத் தொடுவான். இந்த வரிசை இங்குக் கருதப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ கிருஷ்ணன்— குழந்தாய், வெகு வெகு கெட்டிக்காரி நீ. நீயா ஏமாறுகிறவள். நான் தான் அதைத் தெரிந்து கொள்ளாததோடு தவறிவிட்டாய் என்று குற்றம் கூறவும் முற்பட்டேன். அதுகிடக்கட்டும் மேலே சொல்.

நாயகப்பெண்— கிருஷ்ணா, நீ அப்படிச் சொல்லக்கூடாது உனக்குத் தெரியாதது என்ன இருக்கிறது? எங்களிடத்திலுள்ள மிகுந்த ப்ரேமத்தினால் பலவிதமாக எங்களை உபயோகித்து நீ களிக்கின்றாய் என்பது எங்களுக்குத் தெரியும். இனி ப்ரக்ருத விஷயத்தை விண்ணப்பம் செய்கின்றேன் கீழ்ச் சொன்னபடி அலங்காரங்களையெல்லாம் செய்துகொண்ட பிறகு ஆடை உடுப்போம்.

(தொடரும்)

ஸ்ரீ:

பட்டாபிஷேக ஸ்ரீமுகம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

உடனே விளம்பி ஹு தைமீ 10௳ சுக்ல ஏகாதசீ ஞாயிற்றுக்கிழமை ரோஹிணீ நக்ஷத்ரத்தில் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹனும் கண்ணனுமாக ஒன்று சேர்ந்து தன் பக்தர்கள் எல்லோரையும் ஒரு பெரும் பரிஷத்தாக பெரும்பாக்கம் என்ற கிராமத்தில் (அந்த கிராமத்தில் தான் லக்ஷ்மீநரஸிம்ஹன் அப்போது எழுந்தருளியிருந்தது) சேர்த்து தாமும் அவர்களிடம் அநுப்ரவேசித்து அவர்கள் மூலம் லோகப்ரஸித்தமான என் விபூதியான ஆசார்யஸ்தானமானது ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகனுக்கு அதீனமாகட்டுமென்று ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருவுள்ளமாக அறியவேண்டும் என்று ஆஜ்ஞாபிக்கலாயிற்று. 24

ज्ञात्वेदं किंगृहेशः स्ववशमिति धिया स्वेष्टपूर्तिं विदन्सन्
अस्मच्छ्रीभूतमेतन्नृहरिपदमितो लेख्यतां वण्शठारे ।
इत्यादिश्यादसीयं जनममिमुखयन्मत्सकाशं मदीय-
श्रीभूतं श्रीनृसिंहास्पदमिह गमयेत्यादरेणादिदेश ॥

இதையறிந்த எவ்வுள் கிடந்தானும் தமக்கு அதீனமானபடி தம்முடைய இஷ்டபூர்தியால் ஸந்தோஷித்து ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனை யழைத்து நம்முடைய விபூதியான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹாஸ்தான ஸம்பந்தமான பத்ரிகைகளில் கடைசியில் **श्रीशठकोप श्रीः** என்று எழுதுவதுபோல் ஆரம்பத்தில் **श्रीवीरराघव श्रीः** என்றும் எழுதப்படட்டும் என்று நியமித்தும், நம் அழகியசிங்கரைக் கடாக்ஷித்து நம்முடைய ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை இவ்விடத்திற்கு எழுந்தருளப்பண்ணிக் கொண்டு வாரும் என்றும் பரிவுடன் நியமித்தாயிற்று. [இதன்கருத்தாவது:- நம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஆஸ்தானம் கிடைத்த விஷயத்தை ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கர் முதலிய சில அந்தரங்கர்கள் திருவெவ்வுளூருக்கு வந்து விஜ்ஞாபித்து அன்றைக்கே ஸ்ரீ வீரராகவன் மங்களாஶாஸனத்திற்கு எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க ஸ்ரீ அழகியசிங்கரும் இவ்வளவும் ஆதிமுதல் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனுடைய ப்ரயத்னத்தின் பலமாகத் திருவுள்ளம் பற்றி அம்மஹாதேசிகனை முன்னிட்டுக்கொண்டே தாம் மங்களாசாஸனத்திற்கு எழுந்தருளுவதாய் நிச்சயித்து அம்மஹாதேசிகனை திருப்பல்லாக்கில் எழுந்தருளப்பண்ணி சாத்துப்படி ஸமர்ப்பித்து கண்ணன் ஸன்னிதியிலிருந்து தாம் எழுந்தருளி சத்ரம் சாமரம் ஸ்ரீ சடாரி முதலிய ஸகல மர்யாதைகளையும் அம்மஹாதேசிகனுக்கு நடக்கும்படி செய்து பின் தமக்கு நடக்கும்படி செய்து மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. அப்போதுதான் ஸ்ரீ வீரராகவன் ஸ்ரீ ஆதிவன்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனையும் நம் அழகியசிங்கரையும் கடாக்ஷித்து ச்லோகத்தில் சொன்னபடி நியமித்தாயிற்று என்று திருவுள்ளத்தால் இந்த ச்லோகம் ஸாதித்தாயிருக்கிறது.] 25

इत्यादिष्टस्स दासो नरहरिवसतिं दक्षिणाहोबलाख्यं
कञ्चिद्ग्रामं प्रयातो वरिवसकजनान्विच्छुमेनं हि वीक्ष्य ।
त्वय्यर्चां कर्तुकामं सफलमिममवेक्षस्व मामित्यपेक्ष्य
श्रीमद्धस्तीशशेषाद्र्यधिपविषयकं सुप्रभातं सिषेवे ॥

இவ்வாறு நியமனம் பெற்று ஸ்ரீ அழகிய சிங்கர் மறுதினமே புறப்பட்டு விளம்பி வருஷ தைமீ 19௳ செவ்வாய்க்கிழமை ஹஸ்த நக்ஷத்ரத்தன்று பெரும்பாக்கத்திற்கு எழுந்தருளி, அந்த கிராமத்திற்கு ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹன் எழுந்தருளியிருந்த காரணத்தால் 'தக்ஷிணாஹோபலம்' என்ற திருநாமத்தைச் சாற்றி, பெருமாள் ஸன்னிதிக்குச் சென்று, இப்படிப் பட்ட ஆராதகஸ்வாமியை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிற லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸேவித்து தேவரீர் திருவாராதனத்தை ஏற்றுக்கொள்ளவிருக்கும் அடியேனை க்ருதார்த்தனாக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்து தேவப்பெருமாள் விஷயமாக தாம் அருளிச்செய்திருந்த 'சாரீரகஸுப்ரபாதம் (शारीरकसुप्रभातम्) என்றதையும் லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவேங்கடமுடையான் விஷயமான ப்ராசீன ஸுப்ரபாதங்களையும் ஸேவித்து திருவாராதனம் உபக்ரமித்தாயிற்று. 26

तत् श्रुत्वा श्रीनृसिंहः प्रमुदितवदनो दिव्यगाथाप्रबन्धान्
गोदाश्रीमच्छठार्याद्यनुभवविशदीकारसिद्धान्प्रबन्धान् ।
भृत्यैरध्याप्य तेन प्रथितनरहरिं सम्यगाराध्य तस्मै
दत्वा द्राक् हंसमुद्रादिकमधिपतितामस्य निन्ये पदस्य ॥

அதைச் செவியுற்ற ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹன் திருப்பல்லாண்டு திருப்பாவை கண்ணினுண் சிறுத்தாம்பு திருவாய்மொழி முதலிய ப்ரபந்தங்களையும் ஸந்துஷ்டராய் பக்தர்களைக் கொண்டு ஸேவிக்கச் செய்து நம் அழகிய சிங்கர் மூலம் தம் திருவாராதனத்தை செவ்வனே கொண்டருளி அவருக்கு ஸ்ரீ ஹம்ஸ முத்திரை முதலியதை அநுக்ரஹித்து அவரை லக்ஷ்மீ ந்ருஸிம்ஹாஸ்தானத்திற்கு அதிபதியாகச் செய்தருளினார். 27

तस्मिन्काले करीशो नरहरिवरदो हस्ततारेऽवतीर्णः
स्वे हस्ते दासमेनं विदधदभिमतं हस्तगं मेऽन्वगृह्णात् ।
अन्येद्युश्चापरेद्युर्नरहरियजनं कारयित्वा प्रयाप्य
स्वीयं मां किंगृहेशः स्वजनिमहदिने पौषदर्शे ददर्श ॥

அந்த ஸமயம் பெரும்பாக்கம் க்ராமத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கரிசைலநாதனான நரஹரி வரதனும் தாம் ஹஸ்த நக்ஷத்ரத்தில் அவதரித்ததற்கு அநுகுணமாக (ஹஸ்த நக்ஷத்ரத்தில் ப்ரீதியுள்ளவராய் ஸ்ரீ அழகிய சிங்கரை தம்முடைய நக்ஷத்திரமான ஹஸ்தத்தில் கையில் இருத்திக்கொண்டு (வடமொழியில் ஹஸ்த என்பது நக்ஷத்ரத்

திற்கும் கைக்கும் பெயர்) அவருக்கு அபிமதமான லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஹஸ்த நக்ஷத்ரத்தில் அவருடைய ஹஸ்தத்தில் சேரும்படி செய்து அநுக்ரஹித்தார். [அவ்வூர் பெருமாள் மங்களா சாஸனமும் நடந்து அவர் நியமனம் கிடைத்ததென்றும் அவ்வூர் வாஸிகளும் இதை அங்கீகரித்தார்களென்றும் இதன் உட்கருத்து]. இப்படி மறுதினமும் அதற்கடுத்த தினமும் அங்கு பெருமாள் திருவாராதனம் செய்தருளி பின் லக்ஷ்மீ நரஸிம்ஹனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு யாத்ரையாகப் புறப்பட்டு திருவெவ்வுளூருக்கு எழுந்தருளி ஸ்ரீ வீரராகவனுடைய தை மாதத்திய புஷ்யோத்ஸவத்தில் அவனுடைய அவதார தினமான தை அமாவாஸ்யையன்று ஸ்ரீ வீரராகவனை மங்களாசாஸனம் செய்தாயிற்று. 28

विष्वक्सेनादिपूर्वं शठरिपुभजने स स्मरन्हंसमुद्रां
प्राग्वन्मच्छ्रीप्रधानं नृहरिपदमिदं निर्वहेस्त्वं गृहीत्वा ।
सैनां मत्तो गृहाणेत्यधिशयगमितामंगुलिस्थां व्यतानीत्
सद्यो रामानुजार्यस्स्वकलितविधिना स्वे गृहेऽयाजयत्तम् ॥

ஸேனை முதலியார் துடக்கமாக மங்களாசாஸன க்ரமத்தில் ஆழ்வாரை ஸேவிக்கும் போது ஆழ்வாரும் தம்முடைய அநுக்ரஹமான ஹம்ஸ முத்ரையை மனதில் நினைத்து என்னுடைய விபூதியில் முக்யமான (**शठकोपश्रीप्रधान**) லக்ஷ்மீ ந்ருஸிம்ஹாஸ்தானத்தை என்னிடமிருந்து இந்த ஹம்ஸ முத்ரையைப் பெற்றவரே நிர்வஹிக்கவல்லவராவர். அது கொண்டு நீரும் என்னிடமிருந்தே பெற்றுக்கொள்ளுமென்று ஹம்ஸ முத்ரையைக் கையில் கொடுத்தருளி விரலில் அணியும்படி செய்தருளினர். அன்று ஸ்ரீ பாஷ்யகாரர் தம்முடைய ஸன்னிதியில் தம்முடைய நித்ய க்ரந்தத்தின்படி லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு திருவாராதனம் செய்து வைத்தாயிற்று. 29

इत्थं वीररघूद्वहस्य यतनाल्लब्धं नृसिंहास्पदं
श्रीमद्वीररघूद्वहश्रयभिधया तस्याज्ञया योजयन् ।
तद्भक्ताच्छठकोपसूरीकरतः श्रीहंसमुद्रां भजन्
प्राचीं श्रीशठकोपलक्ष्म्यभिहितां संज्ञां समन्वर्थये ॥

இப்படி ஸ்ரீ வீரராகவனுடைய முயற்சியால் கிடைத்த ஸ்ரீ ந்ருஸிம்ஹாஸ்தானத்தை அவருடைய நியமனத்தால் ஸ்ரீ வீரராகவஸ்ரீ: என்ற திரு நாமத்துடனும் அவருடைய பக்தரான நம்மாழ்வாரிடமிருந்து ஹம்ஸ முத்ரையைப் பெற்றபடியால் ஸ்ரீ சடகோபஸ்ரீ: என்ற ப்ராசீனமான திருநாமத்துடனும் சேர்த்து ஸ்ரீ வீரராகவசடகோப ஸ்ரீ: என்று தமக்குத் திருநாமமுள்ளதாக்கியருளி ஆஸ்தான நிர்வாஹத்தை நடத்தியருளினர். [இக்கருத்தாலேயே பட்டாபிஷேக ஸ்ரீ முகத்தில் முதலில் ஸ்ரீ வீரராகவஸ்ரீ: என்று உபக்ரமித்து கடைசியில் ஸ்ரீ சடகோப ஸ்ரீ: என்று கையெழுத்து சாத்தும்படி திருவுள்ளமாகத்

தெரிய வருகிறது. ச்லோகங்கள் முடிந்ததும் **एवं वीरराघवदिव्याज्ञालब्धश्रीवीरराघवशठकोप नामा................स्वामी** என்றும் ஸ்ரீமுகத்தின் க்ரமம் இருக்கிறது.

இவ்வளவாக திவ்யப்ரபந்தாத்யயனம் தொடங்கி ஆஸ்தானத்தை அங்கீகரித்தவளவாக உள்ள சரித்ரவைபவம் இந்த பட்டாபிஷேக ஸ்ரீமுகத்தில் 30 ச்லோகங்களால் விவரிக்கப்பட்டது. இனி இச் சரித்திரத்தின் மேல் பாகம் சுருக்கமாக எழுதப்படுகிறது.

பின் ஸ்ரீ வீரராகவனுடைய புஷ்யோத்ஸவம் அவப்ருதாந்தமாக முடிந்ததும் ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனுக்கு மார்க்க ச்ரமத்தாலுண்டான விடாய்த்தீரும்படி ஸ்ரீபாஞ்சராத்ர விதிப்படி ஸஹஸ்ரகலசாபிஷேகம் செய்தருளி விசேஷாராதனத்தையும் செய்தருளி பரிஜனங்களுக்கும் வித்வான்களுக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனே பஹுமானம் பண்ணுவதாகத் திருவுள்ளம் பற்றி மாத்ராதான காலத்தில் விசேஷ த்ரவ்யங்களை ஸமர்ப்பித்து அந்த த்ரவ்யத்தைக் கொண்டே வஸ்திரங்களை வாங்கி அவரவர்களின் அதிகாரானுகுணமாக ஸம்பாவனை செய்தருளினர்.

அப்போது விளம்பிஸு மாசிமீ 12உ ஸ்ரீ அழகியசிங்கரின் பட்டாபிஷேக ஸ்ரீமுகம் நாநாதேசங்களுக்கு அனுப்பப்பட்டது. பின் விகாரிஸு சித்திரைமீ வரையில் திருவெவ்வுளூரிலேயே எழுந்தருளியிருந்து பின் ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வாரை மங்களாசாஸனம் செய்யவேண்டுமென்ற அதிகமான அபிநிவேசத்துடன் அவ்வருஷம் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்திற்கு திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளத் தீர்மானித்து யாத்ரையை உபக்ரமித்து பாதசாரியாகவே பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளினர். அங்கு ஸ்ரீ அஹோபில மடத்தில் ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனர்ச்சாமூர்த்தியான உத்ஸவபிம்பத்தை ப்ரதிஷ்டை செய்தருளினர். அதன் பின் அந்த ஸமயம் தேவப்பெருமாள் ஸன்னிதியில் அதிகாரிகளுக்கும் பரிஜனங்களுக்கும் இருந்ததொரு விவாதத்தின் காரணமாக தேவப்பெருமாளை மங்களாசாஸனம் செய்யாமலேயே மிக்க மனக்குறையுடன் ஸன்னிதி ப்ரதக்ஷிணமாகப் புறப்பட்டருளி க்ரமேண ஸ்ரீ மதுராந்தகம் வழியாக திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளியாயிற்று.

அவ்விடத்தில் சாதுர்மாஸ்யஸங்கல்பம் உபக்ரமித்து நடக்கையில், ப்ரதிதினமும் கருடநதியில் ஆச்ரமத்துறையில் நீராடி அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு திருச்சின்ன கோஷத்துடன் மடத்திற்கு எழுந்தருளி அபிகமனாராதன காலத்தில் மாத்ராதானம் செய்யும்போது வழக்கம்போல் விசேஷ த்ரவ்யத்தை ஸமர்ப்பணம் செய்து அதைக்கொண்டு வித்வான்களுக்கு ஸம்பாவனையையும் ஆழ்வார் ஆசார்யர்களுடைய திருநக்ஷத்ரோத்ஸவ காலங்களில் பாராயண ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனையும் செய்து வந்தார். இப்படி அபிகமனத்தை முடித்துக்கொண்டு உபாதான காலத்தில் ஆச்ரிதர்களுக்கு ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் ஸாதித்தாயிற்று. அந்த ஸமயம் தான் ஸ்ரீ திருக்குடந்தை (38-ம் பட்டம்) அழகிய சிங்கரும் ஸ்ரீ முஷ்ணம் ஸ்வர்ணம் ஸ்வாமியும் அழகிய சிங்கரிடத்தில் ஸ்ரீபாஷ்யம் அதிகரித்தார்கள்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸபத்நீகரான அவர் இப்படி இன்பஸம்ச்லேஷம் தருவதற்கே தீக்ஷையோடு கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். அது அந்த தம்பதிகள் தர்மம். அவர்கள் தர்மத்தை அவர்கள் காப்பதற்கு முயன்றுவருகிறார்கள். இந்த ஸமாதியை கடனே செய்யவே அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அசக்தியை அவர்கள் தம் தயையால் நீக்கி இதை கடனே செய்கிறார்கள். நிரவெயநிமூத்ரயெ— தேவிமார் ஸ்ரீபூமிநீளை மூவர், நமக்கு ஜ்ஞாந வெளிச்சம் தரும் மூன்று திருவிளக்கு நாச்சியார்கள் 'த்ரயீ' என்னும் மூன்று வேதமேதவிகள். 'ஶாநம் ப்ரதீபமிவ காருணிகொ ஜாதி' ஶாஸ்த்ரதீபத்தை நமக்கு தயையால் ஏற்றி வைத்திருக்கிறார். இதனால் நம் அஜ்ஞாந இருளை நீக்கி ஜ்ஞாநவெளிச்சத்தை யருள பகவானே ஸ்வயமாக அநாதியாக கருணை கொண்டிருப்பது காட்டப்படுகிறது, நிகிலமொக விதாரணை — ஸர்வபோகத்திற்கும் நினைத்ததையெல்லாமளிக்கும் சிந்தாமணியே அவர். 'சுயிதுகுவு கூ' நீ வேண்டாததுதான் தவக்கம். நினைத்தமாத்ரத்தால் இஷ்டத்தைச் சேர்ப்பிப்பவர். ஓயாமல், விச்சேதமில்லாமல் ப்ரியத்தோடு சிந்தநமான த்யானத்தைச் செய்பவருக்கு அவர்கள் விரும்பும் ஸமாதியை கடனே செய்யாரோ என்று கருத்து. ப்ரஸக்தியிஜ்ஞாஷி— நம்முடைய மநம் மற்றச் சபல ஆசைகளை விட எண்ணித் தெளிவை யடைய வேணுமென்ற விருப்பத்தையும் முயற்சியையும் அவர் தெரிந்துகொள்ளுகையில், (உ) நம்முடைய ஆபிமுக்யத்தைக் கண்டு ப்ரஸந்நரான அவரிடம், ப்ரணிதயாந ஸாவாஸதெ — நாம் அவரையே த்யாநம் செய்து அவரிடம் ப்ரீதியையே செலுத்தத்தொடங்கி நமக்கு அவரிடம் ப்ரீதிபாவமிருப்பதாக அவர் தெரிந்துகொள்ளுகையில், ஸாவநா— நம்முடைய த்யாநமாகிய அவர்விஷயமான ப்ரீதிமயமான தொடர்ந்த நினைப்பு. ரதிம் ஸஜதி— 'ரதி' எனும் ஸ்திரப்ரீதி இன்பநிலையையடைகிறது. த்ருதம்— வேகமாக, உருகிக் கரைந்துபோய், லயமிவொவயாதி— நினைவும் (நினைக்கும் மனமும்) இல்லாததுபோல் ஒடுங்கி ஓய்ந்துவிடுகிறது. 'ஒடுங்க அவன் கண்' என்றபடி எங்கே ஒடுங்கி லயம்? ப்ரஸணி— நம்மை ப்ரஹ்மணம் செய்வதையே தன்னுடைய இன்பமும் ஸ்வபாவமுமாக வுடைய ப்ரஹ்மத்தினிடம், புருஷோத்தமனிடம்— ஸர்வாந்தர்யாமியான ஸ்ரிய:பதியினிடம். ரஶாவஸநீதீஸஹாவரித யதிணி — க்ஷமை தயைகளே வடிவான நம் மாதாக்களான ப்ரியபத்நிகளோடு நம்மை ஸம்ஸாரோத்தாரணம் செய்து ப்ரஹ்மணம் செய்வதையே தர்பவ்ரதமாகக்கொண்ட ப்ரஹ்மத்தினிடம், 'ஶ்ரீநெவ ப்ரதிபிம்பிதெவ' என்கிற மாலதீமாதவச்லோகம், கீதை பக்தியோக ஷட்கத்தொடக்கமான 7-ம் அத்யாயத்தொடக்கத்தில் சந்த்ரிகையில் உதாஹரிக்கப்பட்டது.

ஸங்கல்பர்:— (ஸந்தோஷத்தோடு) மஹாத்மரே! மற்றொருவருக்கும் கிடைக்கவரிய இந்த உம் ஸ்திதி என் மனத்தை ஆச்சர்யத்தால் தட்டுக்கிடச் செய்கிறது. இது என்ன ஆச்சர்ய ஸ்திதி.

நிவ்ருத்திரஸவாஸநா நிரவஶெஷிதொவ
ஓவா வரப்ரணியிவஙதள ய்ருதிஸவெ
யஷீ ஶெஸஷீ। த்ருதப்ரவரஶகூரா
ஹரிதஜுயாராக்ருதிஃ ப்ரதிக்ஷணவிகூ-
வு நாகமஹமவந்நீ வதமுதெ ॥

விஷய ஆசைகளையே பின் தொடரும் ப்ரவ்ருத்திமார்க்கத்திலிருந்து ஆசையை ஒழித்து

நிவ்ருத்தியெனும் த்ருஷ்ணக்ஷயசாந்திரஸத்தையும், அந்த ஓய்வு வாஸனையையுமே (நிவ்ருத்தி ஸம்ஸ்காரத்தையே) பெருக்கி, அதனால் யாதொரு த்யாநத்தடங்கலும் வாராமல், ஶேமுஷீ—புத்தியானது, ஸாத்த்விகமிவதளா— பரமனை த்யாநம் செய்யும் மார்க்கத்தில், த்ருதிம் – உறுதியையும், இன்பத்தையும், உபேயுஷீ - அடைந்துகொண்டு, ஸ்ரோத ஸ்வாதுஸுகண்டஸாரஸரிதா – நன்றாயுருகியுள்ள சர்க்கரை நிரம்பியுள்ள, க்ஷௌத்ரயாபாகத்ருதி – பாலோடு, ஸ்ப்ருதிகக்ஷணவிகல்பநாகலஹம் ஸஹதே– ஒப்பிடலாமோ, எது அதிக மதுரம் என்ற விசாரத்திற்கு இடங்கொடாமல் சர்க்கரை கலந்த பாலிலும் மிக்க மேலான இனிப்புடையதாகவே, வஹதே – இருக்கிறது. ஸமாதி இன்பம் முற்ற முற்ற முதலில் தோன்றிய சர்க்கரைப்பாலுவமையையெல்லாம் தாண்டிப்போகிறது.

மேலும்:—

கவிகவிதக்ஷகஸ்ருங்கம் கஸ்மக்ஷவஹதிஸ்ஸஜாரம் விக
ஶமநதிஶக்ஷ்வ ஹாஸ்யவை நாஸிகா நக்ருஹம் ।
வாஸ்யதிவஶாவஹேண ஸ்வயநயாதநாக்ஞ
ஸ்வயம் நிவர்த்ய நிரவக்ரஹாம் நிஸ்ஸத
வத்த்விதிகாதிஷ்டவஸி ॥

கவிஸார்வபௌமர் கவிஸிம்ஹமென்ற புகழ்ச்சியைக் கேட்டுக் கேட்டு அதடியாக வரும் கவித்வாபிமானமெனுமாசையும், வாதிஸிம்ஹமென்று பிறர் புகழ்ச்சியைக் கேட்டுக் கேட்டு வரும் கர்வ உஷ்ணஜ்வரத்தையும், தற்புகழ்ச்சியோடு ஸபைகளில் மிக்க ஆடம்பரங்கள் செய்யும் அபிமானப் பிசாசத்தையும், பிறர்கள் புத்தியில் துரூஹமான ப்ரஹ்மாதிவிஷயங்களையும் தெளிவாகவும் மதுரமாகவும் படும்படி போதிக்கும் ஸாமர்த்யமுடையவரென்ற ப்ரஸித்தியையும், ஸ்வயம்- நீராகவே, கிட்டவணுகவொட்டாமல் தள்ளி, நிவ்ருத்திசெய்து, நிரவக்ரஹாம்– தடங்கலில்லாத, ஸமாதிரஸவர்ஷம் ஓயாமலிருப்பதால், அவக்ரஹம்–(அநாவ்ருஷ்டியெனும் பக்திரஸ வெள்ளப்பஞ்சமில்லாத) நிஸ்ஸத்வஸத்த்வம் – ஏகாந்த நிலையையும், ஏகாக்ரத்யாநஸமாதியையும், ஸ்திதிம் – நிலையாகக் கொண்டிருக்கிறீர். 'அவக்ரஹம்' என்பது மழையில்லாத அநாவ்ருஷ்டியெனும் பஞ்சம். ஸமாதியை 'தர்மமேக:' என்று யோகஸூத்ரம் வர்ணிப்பது. பக்தியெனும் இன்பரஸத்தை வர்ஷிப்பது. 'நமோ நாதமுநிம் நாத ஜீமூதம் ஸஹ்ருத்வய ஸஹ்ருதே। வைராக்ய ஹ்ருதவத்க்ஞாநஸம்ஸ்த்ருதிவிஷதர்ஷகம் ॥' என்கிற ஸ்ரீரங்கராஜஸ்தவச்லோகமிங்கே ஸ்வாமி நெஞ்சிலுள்ளது. யோகஸூத்ரமும் நெஞ்சிலுளது. அந்த ச்லோகத்தினுரையை அந்த ஸ்தவ வ்யாக்யாநத்தில் கண்டுகொள்வது. நாதமுனிகள் இந்த நாடகத்தொடக்கத்திலேயே நினைக்கப்பட்டார். 'நாயகஸ்ய ப்ரீத்யை நாடகம் ஸந்தந்யதே' என்று முதலங்கத்திலேயே அபிநேயமான இந்த பக்திரஸநாடகம் நாதனுடைய ப்ரீதிக்காக இயற்றப்பட்டதென்று த்வநியால் காட்டப்பட்டது. ரங்கநாதமுனியையும் ரங்கநாதப்பெருமாளையும் நினைத்தது. இங்கும் அவர் நினைவு. பட்டர் ஸாதித்தபடி நாதமுனியெனும் யோகிஜீமூதம் (மேகம்) ஸமாதிரஸத்தை வர்ஷித்தது, இனி பக்திரஸத்திற்கு அவக்ரஹ (பஞ்சம்) மே யிராது. இந்த நாடகத்தை உள்ளபடி அனுபவிப்பவருக்கு பக்திரஸப்பஞ்சமேயிராது. 'ஸித்தமான நான்கு விதபாண்டித்யத்திலும் நிர்வேதம் (வெறுப்பு) வரவேணும்' என்று முன்பே ஸாதித்ததை இங்கே நினைக்கவேணும். ஸ்வாமி நெஞ்சில் அதுவே யுளது. 'நாமோதய: ஸுதீர்கோஹி' என்கிற ச்லோகமும் இந்த அங்கமுடிவில் 87–வது ச்லோகம். தமக்கு வந்த ஏராளமான கவித்வப்ரஸித்தியும், கதகத்வப்ரஸித்தியும், சிஷ்யர்கள் புத்தியில் தெளிவாய்ப்படும்படி போதிக்கும் அநிதரஸாதாரண ஸாமர்த்ய ப்ரஸித்தியும் நாடெங்கும் பரவியேயிருப்பதையும் ஸ்வாமி 'ஸத்காரகாலகூடம்' என்றபடி விஷமாக நினைத்ததே இந்த ச்லோகத்திலும் ஸ்வானுபவமும் வெளியிடப்படுவது போலும்.

புருஷன்— தேவனே!

த்வத்ப்ரஸாதிஸம்ஸ்பர்ஶம் ப்ராக்ப்ரவணஸ்வபா
வஸ்ய மே ப்ரத்யக்ப்ரவணீ பாவப்ரவ்ருத்தி:. பகவத் தயாதேவியின் ஸ்பார்சினால் உதிக்கும் பகவத் ஸங்கல்பமாகிய உம் ப்ரபாவமில்லாவிடில் பராக்காகவே, பராங்முகமாகவே, வெளிப்புறமாகவே செல்லும் ஸ்வபாவமுடையதாகவே பகவானால் அமைக்கப்பட்ட இந்த்ரியங்களும் மனமும் உள்ளே அந்தராத்மாவிடமே திரும்பி அங்கேயே செல்லுமோ? இது இயற்கை ஸ்வபாவத்தைமாற்றும் அகடிதகடனையாகும். 'ஸர்வ- ஜித் வாக்' என்ற கடவல்லிமந்த்ர மிங்கே நினைக்கப்படுகிறது. உம்முடைய ப்ரபாவம் எண்ணுவதற்கு அஸாத்யமானதென்று ஆகமங்கள் உத்கோஷிக்கின்றன.

க்ரியாஶக்திம் கேசித் தநுஜதமநீம் ஹேதிமபரே வதந்தி த்வாம் மதுஸூதநஸ்ய ஸர்வவிஜயிநஸ்ஸங்கல்ப ஹய: । தஸ்மைவைகே தத்த்வவிஷயஜ்யேஷ்டம் தமிமம் ஸ்வஸ்தோத்ருஜ: ப்ராஜ்ஞாஸ்ஸமவிஷய ஸங்கல்பஸூர்யோதய: ॥

'ஆகமங்கள்' என்றது வேதாகமங்களையும், பாஞ்சராத்ராகமங்களையும், கீதாதிஸ்ம்ருதிகளையும் குறிக்கும். 'ஸங்கல்பஸூர்யன்' என்பது யாரென்று சொல்லவேண்டுமே. நாடகத் திருநாமமது. நாடகம் எதைப்பற்றியதென்று விளக்கவேண்டாவோ? விளக்கவேண்டியதுதான் அதைப்பற்றி அபிப்பிராயபேதங்களுண்டு. பஞ்சராத்ராகமங்களில் பகவானுடைய அஸுராஸுரநிராஸகமான ஸுதர்ஶனரெனும் ஹேதிராஜரென்பது முன்பே ஆகமப்ரதர்சநத்தோடு கூறப்பட்டது. அந்தப் பக்ஷத்தை இங்கே 'தநுஜதமநீம் ஹேதிமபரே' என்று இங்கே இரண்டாவதாக வைத்திருக்கிறது. வலதுதோளில் குழந்தைப்பருவம்முதல் ஸஹாயமும் பலமுமாக நின்று வைஷ்ணவனுக்கு வைஷ்ணவமுத்ரை வைத்துக் கடைசியில் விஷ்ணு பரமபதத்தில் சேர்ப்பிப்பவர். மனஸ் தத்வத்திற்கு அவர் அபிமாநியான நித்ய ஸூரி. நம் மனது இந்த உள்ளாத்மயோகத்தில் திரும்பும்படி அநுகூலப்படவேணும். ந்யாயஸித்தாஞ்ஜனத்தில் நித்யவிபூதிபரிச்சேதத்தில், 'தத்வரத்நாகரத்தில் பட்டர் ஈச்வராதிகளுக்கும் மனது உண்டென்று பல ப்ரமாணங்களை உதாஹரித்துக் காட்டியுளர்'. 'கேவல தர்க்கத்தாலிதை ஸமர்த்திக்கக் கூடாவிடினும் ஆகமாநுக்ரஹத்தாலிது ஸித்திக்கும். 'மநஸா து ஸமாநு பஶ்யது மநஸே' 'மநோ ஸ்ய தைவம் சக்ஷு:' 'மநஸைவ ஜகத்ஸ்ருஷ்டம்' முதலிய வசநங்கள் பட்டருதாஹரித்தவை. 'மதுஸூதநஸ்ய' என்பது இதைக் குறிப்பது. கேசித்- சிலர், த்வாம்- உம்மை, ஸர்வவிஜயிந: க்ரியாஶக்திம்- வேதாபஹாரகமதுகைடபர்களை நிரஸித்து வேதங்களை மீட்டுத் தந்த மதுஸூதநபகவானுடைய ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரஸம்ஸாரவிமோசநாதிஸாமர்த்யமாகிய ஶக்தியென்றும், அபரே- சிலர், தநுஜதமநீம் ஹேதிம் - அஸுரர்களையும், ஆஸுரஸ்வபாவமாகிய மஹாமோஹாதிகளையும் தொலைக்கும் ஹேதிராஜரான ஸுதர்ஶநரென்றும், இந்த ஸங்கல்பஸூர்யர் 'கோடிஸூர்ய ஸமப்ரபர்' என்று வ்யஞ்ஜநம். மதுமதநரென்றதால் ஹயக்ரீவ மூர்த்தியின் வ்யஞ்ஜநமும் சேருகிறது. ஹயக்ரீவருடைய ஸங்கல்பஸூர்யரென்பதும் கிடைக்கிறது. 'ஸ்ரஷ்ட்ருத்வ ஶக்திவர்' என்கிற ஶுகர் ச்லோகத்தை நினைக்கவேணும். 'விவிதஸம்ஸ்ருதிகரம்' 'விபாலஸம்ஸ்ருதிகரம்' 'ஸம்ஹ்ருதவிஶ்வக்ரியாய', 'ஸ்வஸம்ஸ்ருதிகாரணாய' நாராயணாயோநாராயணாய ஶுஸ்வர: । யதாயதம் ஜகத் ஸ்ருஷ்டம் காரணம் ச ஶாஶ்வதம்' 'க்ரியாஶக்திகுணோ விஷ்ணோ:' இது முதலிய ஸ்வாமி ஸ்ரீஸூக்திகளை நினைக்கவேணும். 'ஹேதி' என்று பொதுவாகக் கூறியிருப்பது ஹேதிராஜரைக் குறிக்கும்; 'கீதை' என்பது பகவத்கீதையைக் குறிப்பதுபோல எல்லா ஹேதிகளுக்குமிவரே ப்ரஸித்தி என்பர். 'தத்த்வவிஷய ஜ்யேஷ்டம்— சக்தியோ, ஹேதியோ, மனஸோ, எந்தப்பேர்ச் சொன்னாலும் அந்தப் பேரின் பொருளாயிருப்பதோடு விசிஷ்டமான, தம்

ஸவ ஸகெ சுகிதய்ா:— அந்த மதுஸூதந ஞகவே (உம்மைக்) கூறுவர். ஸஹொதூஜு:— எப்படியிருந்தாலென்ன, எப்படியும், எப்பொழுதும் நீர் அத்யுந்நதரே. ஸவஸிந்ு ஹூஞெநு:— ஸம்ஸாரஸமுத்ரத்தைத் தொலைப்பவராக, ஹூாஜஹூவஸி— உதிக்கிறீர். 'உஜயனெவ ஸவிதா வஜெஷவயதி ஸ்ரியம்' என்பர். உதிக்கையிலேயே நீர் எம் துயரக் கடலாகிய பவக்கடலைத் தொலைத்துக்கொண்டே உதிக்கிறீர். ஸஹொதூஜு என்றும் பாடம். நீர் பகவானுடைய ஸுதர்சனர். ஆயினும், அவருடைய சக்தி மனஸு ஆயினும், நீர் அவருக்கு அப்ருதக்ஸித்தவிசேஷணமே. உம்மோடு கூடிய அவரானுலென்ன, அவருக்கு விசேஷணமான நீரானுலென்ன.

ஸங்கல்பர்— பகவானுக்கு உம்மிடமேற்பட்டிருக்கும் க்ருபைக்கு ஒரு தடங்கலும் வாராது. 'விதிவாய்க்கின்று காப்பாரார்'. நான் அவருடைய அநுசரன் தானே. அவர் கட்டளைப்படி ஓடுபவன் தானே. ஆகையால்—

நிரவாயஶூவ்யாமம் நிஜவக்ஷநிவிஷ்டநித்ய
ஹரிதகம்| மாணவஜுரஷிதம் க்வாம் மூக
இவ ஶொக்யாஜி ஷிவ்யமதியொம்ய ||

யதிராஜர் நினைவு இங்கே ஸ்வாமி நெஞ்சிலோடுகிறது. குருபரம்பரை நினைவே. 'நாயஸ:' என்று முநித்ரயத்தையும் கடைசியில் சேர்த்துக் குறிக்கப்போகிறார். 'சுவஸூந வக்ஷஸ்ய யதிக்ஷமாஹ்ருதொ விஹாதி வம்ஶ ஹரிதகஸ்வ்யூதம்' என்கிற யதிராஜஸப்ததிச்லோகநினைவு. அங்குப் ஸ்ரீபாஷ்யகாரஜ்ஞாநவச்யர்கள் முக்தர்களாய் சோபிக்கின்றதைக் கூறினர். சுகர் பாகவதத்தைப் பாடி பரீக்ஷித்தை முக்தராக்கினர் 'ஹக்திவிரக்தீ ஹாமவெதந'. இந்த நாடகத்தைப் பாடியாடி ஸம்ஸாரஸமுத்ரத்தைத் தாண்டி முக்தராகும்படி காருணிகரான கவியால் லோகோபகாரம் செய்யப்படுகிறது. 'சுயிமதவஹூஶாவாநு ஜூவாவ: ஶுகாஜீநு' என்கிற பாதுகாஸஹஸ்ர ச்லோகத்தை இங்கே நினைக்கவேணும். பாகவதப்ரவசநத்தை சுகர் 2-ம் ஸ்கந்தத்தில் தொடங்குகையில், 'வரிநிஷ்டிதொzபி நைமுணெ உத்தமஶ்லோகலீலயா | மூஹீதவெதா ராஜஷெ ஆவ்யாநம் யதயீதவாநு' என்று கூறினர். 'நிர்குணநிஷ்டையில் முழுகினவராயினும் உத்தமச்லோகரான பகவானுடைய குணங்கள் தன் நெஞ்சைப் பிடித்திழுத்து பாகவதக்ரந்தம் முழுவதையும் தகப்பனரிடத்திலத்யயநம் செய்து குசலவர்களைப்போல க்ரஹித்து இன்பத்தோடு பாடும்படி செய்தன' என்றார். சுக்ஷரயீகளிலும் ஆநந்தாதிகுணங்களிலும் பகவத்கதைகளிலும் மனம் ரஸித்தது. பகவானுடைய குணங்களாகிய ஜாலத்தில் சிக்கிக்கொண்டு அந்த குணஜாலப் பஞ்ஜரத்தில் அதை விட்டு அப்புறம் புத்தி செல்லாமல் அதிஹர்ஷத்தோடு வஸித்து பாகவதோத்தமரான பரீக்ஷித்திற்கு 7 தினங்கள் கங்கைக்கரையில் மஹர்ஷிகளின் ஸமாஜத்தில் பாடினர். அவர் பகவத்குணஜாலத்தில் அவற்றால் கட்டுண்டார். இங்கே இப்புருஷன் முக்குணக்கூண்டில் அடைக்கப்பட்டிருப்பவன். தேஹக்கூடு முக்குணப்ரக்ருதிக்கூடு. இவனைக் கூண்டிலடைபட்ட ஸாமான்யக்கிளியாக வர்ணிப்பது. நிரவாயஶூவ்யாமம் — புருஷோத்தமன் முக்யர். அவரிடம் நீங்காத ப்ரீதியுடையவர் நீர். கிளியின் வாய் ஸஹஜமும் அழியாததுமான சிவப்பு ராகத்தையுடையது. சுகருக்கும் நிரபாயமான புருஷோத்தமபக்தி. நிர்குணத்யாநத்தை வெறுப்பவர். நிஜவக்ஷநிவிஷ்டநித்யஹரிதகம்— எப்பொழுதும் 'ஹரி' என்னும் தத்வத்திலேயே பரதத்வமாக நழுவாத உறுதி கொண்டவர். கிளியின் இறக்கைகள் பச்சை வர்ணம் (ஹரிதத்வம்) உடையவை. சுகர் பாகவதத்தில் எப்பொழுதும் பகவத் பரத்வத்தையே பாடினர். 'சுவும் மாயத விஷ்ணுமாயா:' என்று பரீக்ஷித்தின் ராகம்.

(தொடரும்)

ஸ்ரீ:

தீர்ப்பாரை

(ஸம்புடம் 14, ஸஞ்சிகை 6-ன் தொடர்ச்சி)

மதுர பாஷிணி:— அதோ ஒரு பெண் நம்மிடம் ஓடோடியும் வருகிறாள். அவள் யார்?

மங்கை நாயகி—:[தூரத்திலிருந்து பார்த்து] நம் பாங்கி போலிருக்கிறதே! முகத்தில் கவலைக் குறி காணப்படுகிறதே! என்ன வருத்தமோ தெரியவில்லையே!

மதுர பாஷிணி:— நம் தலைவி பராங்குச நாயகி விஷயமாயிருக்கலாமென்று நினைக்கிறேன்.

பாங்கி:— [அருகில் வந்து] உயிர்த் தோழி! நம் தலைவி பேச்சு மூச்சில்லாமல் மூர்ச்சித்துக் கிடக்கும் தசையில், தாங்கள் அவளை இப்படிப் பிரிந்திருக்கலாமா? ஐயோ! அவள் கதி என்னவாகுமோ தெரியவில்லையே! [மூர்ச்சித்து வீழ்கிறாள்]

மதுர பாஷிணி:— பாங்கி மூர்ச்சித்ததைப் பார்த்தால் தலைவிக்கு ப்ராண பயமென்று தோன்றுகிறது. [மெல்லிய குரலில்] अत्युच्छ्रायः पतनहेतुः.

மங்கை நாயகி:— அது என்ன? அத்யுச்ராயம் 'வீற்றிருந்தேழுலகுமா'?

மதுர பாஷிணி;— 'எற்ற நோற்றேற் கினியென்னகுறை எழுமையுமே', 'மாற்ற மாலை புனைந்தேத்தி நாளும் மகிழ்வெய்தினேன்', 'அரியதுண்டோவெனக் கின்று தொட்டுமினி யென்றுமே', 'என் குறை நமக்கே', 'யாவர் நிகர் அகல் வானத்தே', 'இனி மாறுண்டே?', 'வண்டமிழ் நூற்க நோற்றேன் அடியார்க் கின்பமாரியே'— இப்படியெல்லாம் நம் நாயகி களித்ததைப் பார்த்தால் பதநஹேது வென்று அப்போதே நிச்சயித்தேன்.

[இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும் போது பாங்கி மூர்ச்சை தெளிந்து எழுகிறாள். மூவரும் புறப்பட்டு ஆதிநாதன் ஸந்நிதி திருப்புளியடியில் வந்து சேர்ந்தனர். ஆடு கோழி மத்யம் மாம்ஸம் கருஞ்சோறு செஞ்சோறு கட்டுவிச்சி வெறியாடும் வேலன் துணங்கைக் கூத்து — இவைகள் அங்குக் காணப்படுகின்றன. கூத்தடிப்பவர், குறி சொல்பவர், ஆவேசமாடுபவர்களின் கோஷம் அதிகரிக்கிறது. தலைமகள் பக்கல் தமக்குண்டான அன்பு மிகுதியால் ஏதேனும் ஒரு தெய்வத்தை வழிபட்டேனும் இவளை உயிர்த்திருக்கப் பெறில் அதுவே நமக்கு ஆத்மலாபமென்று எண்ணி வழியல்லா வழியிலே இழிந்து அதற்குப் பரிஹாரம் செய்யப்புக, நோயொன்றும் மருந்தொன்று மாதலால், தான் காதலித்த புருஷோத்தமனை தலைமகனது தகுதிக்கு ஏலாத அச்செயல்களை நோக்கித் தலைமகள் வருந்துகின்றாள். செவிலித்தாய் மிகவும் கவன்று தலைமகள் உடம்பில் தண்ணிய சந்தனக் குழம்பை அப்பிச் சைத்யோபசாரம் செய்கிறாள். அச்சந்தனக் குழம்பு கலவிக் காலத்தில் இன்பம் செய்யும் பொருள்களில் ஒன்றாதலால், பிரிவுக் காலத்தில் அது காமரஸத்தை மிகுவிக்கிறது. அவ்வுபசாரத்தைத் தலைவி வெறுக்கிறாள். பின்னும் புண்ணில் புளிப் பெய்தாற்போல் தென்றல் வீசுகிறது; அன்றில் கூவுகிறது, தலைமகள் மிகவும் வருந்துகிறாள்.]

மதுர பாஷிணி:— மங்காய்! தலைவியின் நோய் அதிகரித்துக்கொண்டே வருகிறது. நாம் இருவரும் ஆழ்ந்து யோசித்து இந்நோய்க்குத் தகுந்த பரிஹாரம் தேடவேண்டும்.

[சற்று விலகி நின்று யோசிக்கிறார்கள்.]

"நோய் நாடி நோய்முதல் நாடி யது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்ப செயல்" [குறள்]

என்றபடி இந்நோய் இன்னதென்பதையும், அதன் காரணத்தையும், அதற்குரிய பரிஹாரத்தையும் பரிஹாரம் பண்ணவேண்டிய வழிகளையும் நான் நன்கு ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்.

மங்கை நாயகி:— எப்படியடி இவ்வளவு விரைவில் இவைகளையெல்லாம் அறிந்தாய்? சொல்லடி.

மதுர பாஷிணி:— இந்நோய் விலக்ஷணமான ஒரு நன்னோய் — தெய்வ நன்னோய் — சீராகிய தெய்வ நன்னோய். 'கண்ணனுக்கே யாமது காமம்' என்று கண்ணன் விஷயமான காதல் நோய். இந்த நோய்க்கு நிதானம் மாயப் போர்த் தேர்ப்பாகனார் (பார்த்தஸாரதி); பரி

ஹாரம் மாயன் தமரடி நீறு (பாகவத ஸ்ரீ பாத ரேணு); கவளக்கடாக் களிறட்டபிரான் திரு நாம ஸங்கீர்த்தநம்; பஞ்சாயுத ஸ்தோத்ரம். நோயாளிகளுக்கு உட்செலுத்துவதொரு மருந்தும் மேலிற் பூசுவதொரு மருந்தும் உப யோகித்தல் போல தலைவன் திருநாமத்தை இவள் செவி வழியாக உள்ளே புகும்படி உச் சரித்தும், புறம்பே அவன் சாத்தின திருத் துழாய் மாலையைக்கொணர்ந்து இவளுக்குச் சூட்டினால் இவள் நோய் தீரும். தவிர: பாக வத புருஷகாரமாய் பகவச் சரணாகதி பண்ணு தல். இவைகளே இவள் நோய்க் கேற்ற பரி ஹாரங்கள்.

மங்கை நாயகி:— இப்படிப் பரிஹாரம் செய் வதை விட்டு, தலைவியின் நோயின் இயல்பை அறியாமல் தேவதாந்தர பாரும் கூடிக் கலக் கும்படி வந்துவிட்டதே! பாவம்!

மதுர பாஷிணி:— அல்ப விஷயத்தைப் பிரிந் தாரும் தாளாமல் எவ்வளவோ துயரத்தை அநுபவித்திருக்கிறார்கள். ஸாக்ஷாத் பகவா னைப் பிரிந்த நாயகிக்குக் கேட்கவேண்டுமா?

மங்கை நாயகி:— அதென்ன விஷயம்? புரிய வில்லையே. தெளியச் சொல்.

மதுர பாஷிணி:— ஜ்ஞாநாதிகராய், பகவத் விஷயத்தில் ஆசார்யகம் வஹிக்கக் கூடிய வஸிஷ்ட பகவான் அல்ப விஷயமான புத்ர சோகம் தாங்காமல் மலையினின்றும் உருள்வ தும் நெருப்பில் விழுவதும் கடலில் விழுவது மாக வில்லையா? அத்யாத்ம க்ரந்தோப தேஷ் டாவான வ்யாஸ பகவானும் சுக வியோகத் தால் மனந்தளர்ந்து சாயா சுகரைக்கொண்டு ஜீவிக்கவில்லையா? தாம்ரத்தை இழந்தவர்க்கும் தங்கத்தை இழந்தவர்க்கும் ரத்நத்தை இழந்த வர்க்கும் துக்கத்தில் வாசிபோல், மயர் வற மதி நலமருளப் பெற்ற ஆழ்வார் ஆச்ரிதஸுலப னுன பகவானுடைய விச்லேஷம் தாங்காமல் இவ்வளவு மோஹித்துக் கிடக்கையும் யுக்தந் தானே. நம் நாயகியினுடைய இந்த அவஸ்தை யைப் பார்த்தால் ஸ்ரீபரதாழ்வான் அவஸ்தை என் ஜ்ஞாபகத்துக்கு வருகிறது

மங்கை நாயகி:— (ஆவலுடன்) அடீ! அதைச் சற்று நன்றாய் விவரியேன். கேட்போம்.

மதுரபாஷிணி:— எனக்குத் தெரிந்த வரை யில் சொல்லுகிறேன். கவனித்துக் கேள். ஸ்ரீபரதாழ்வான் கேகய தேசத்தினின்றும் திருவயோத்தி வந்ததும், நடந்ததொன்றும் அறியாது கைகேயியின் அந்தப்புறத்துக்கு வந்து சக்ரவர்த்தியின் மரணத்தை அறிந்து சோகித்துக் கிடக்குமளவில், கைகேயி வந்து பரதனைத் தழுவி, ராஜ்ய லோபத்தால் வந்த சோகாதிசயமென்றெண்ணி, 'அப்பா! பரதா! நீ ஏன் வீணாகத் தரையிற் கிடக்கிறாய்? உனக்கு ராஜ்யம் வாங்கி வைத்திருக்கிறேன். நீ தான் இனிமேல் சக்ரவர்த்தி அதுவும் என் வயிற்றிற் பிறந்த பாக்யாதிசயத்தால் தான். இனி நீ மஹா கீர்த்திமான் ஆவாய்: எழுந் திரு எழுந்திரு' என்று சொன்னாள். பகவத் கைங்கர்யமே புருஷார்த்தமென்றிருக்கிற பர தனுக்கு இச்சொற்கள் எப்படியிருக்கும்? தப்த நாராசத்தைக் காதில் செருகினாற்போல் இருந் தது. அதுபோல் ஆழ்வாருக்கு ப்ராக்ருத ஸுகவைராக்யம் பிறந்து நின்ற நிலை திரு விருத்தத்தில். பின்னர் பெருமாள் காடேற எழுந்தருளினது தெரிந்து, இடிமேல் இடி யிடித்தது போல் வருந்தி, அந்தப்பெருமாளை மீண்டும் திருவயோத்திக்கு எழுந்தருளப் பண்ணிப் பட்டாபிஷேகம் பண்ணுவிக்கவேண் டுமென்று மநோரதித்துப் பெருமாளை அழைத்து வரச் சித்ரகூடம் சென்று அவனை அநுபவித்தது போல் திருவாசிரியத்தில். அந் தப் பெருமாள் தமக்கு ப்ரதியாகத் தம் திரு வடி நிலையை அருளிய பின்னர் பதினான்கு வருஷம் தரித்தது போல் பெரிய திருவந்தாதி யில். பெருமாள் ராவணவதா நந்தரம் பிராட்டி யோடு மீண்டும் எழுந்தருளிப் பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்ட ஸமயத்தில் "ஜ்யோதிஸ் சக்ரம் எவ்வளவு காலம் சுழலுமோ, பூமி எவ் வளவு காலம் இருப்பையுடையதாக இருக் குமோ, அவ்வளவு காலம் நீர் இங்கு ஸகலத் துக்கும் ஸ்வாமியாக இருந்து கொண்டு ராஜா வாக இருக்கவேண்டும்" என்று விஜ்ஞாபித் துக் களித்துக் கைங்கர்யம் பெற்றது போல் அவாவற்று வீடு பெற்ற நிலை திருவாய்மொழி யில்.

மங்கை நாயகி:— தந்யனானேன். இனிக் காலதாமதம் செய்வதில் ப்ரயோஜநமில்லை. நாயகிக்குப் பரிஹாரம் செய்ய யத்தனிப் போம். [கூட்டத்தை விலக்கிக்கொண்டு பராங் குச நாயகியின் ஸமீபத்தில் செல்கிறார்கள்.]

மதுர பாஷிணி:— அடீ கட்டுவிச்சி! உங்கள்

கோலாஹலம் போதும். நீங்கள் யாவரும் விலகிச் செல்லுங்கள். நீங்கள் செய்வன யாவும் இவளுக்குப் பரிஹாரமாகமாட்டா. அந்யாயமாய் ஸ்ரீவைஷ்ணவக்ருஹத்தை அசுத்த த்ரவ்யத்தால் எச்சிலாக்காதீர்கள். இசைப்பின்றி நீரணங்காடும் இளந்தெய்வமன்றிது. இவள் பால்யாத் ப்ரப்ருதி ஸூஸ்நிக்தையாய், அவனையல்லால் மற்றொரு தேவதையை நினைப்பதும் செய்யாள். ஆதலால் இவை யாவற்றையும் ஒழித்துக் கண்ணபிரான் கழல் வாழ்த்துவோம். அவன் திருநாமங்களைச் சொல்லி இவள் காது கேட்கத் துதித்தால் அதுவே ஔஷதமாய்த் தாரகமாய், இவள் எழுந்து கூத்தாடுவாள்.

மங்கை நாயகி— நாம் இருவரும் பகவந்நாம ஸங்கீர்த்தநம் பண்ணுவோம். [இருவரும் வண்டுவராபதி மன்னனை நாத்தழும்ப ஏத்துகிறார்கள். கோலால் நிரைமேய்த் தாயனுக் குடந்தைக் கிடந்த குடமாடியின் நீலார் தண்ணந்துழாய் கொண்டு சூட்டுகிறார்கள். களிரட்டபிரான்திருநாமத்தால் தவளப்பொடியிடுகிறார்கள். தலைவிக்கு முகம் தெளிந்து வருகிறது; மந்தஹாஸம் காணப்படுகிறது. இருவரும் ஸந்தோஷிக்கிறார்கள். யாவரும் கண்டு குதூஹலிக்கின்றனர்.]

தலைவி மோஹம் தீர்ந்து வண்டுவராபதி மன்னனைக் கும்பிடு நட்டமிட்டாடி, அங்குள்ள அன்னைமார் பாங்கிமார் உயிர்த்தோழி கட்டுவிச்சி கூத்தாடுவோர் முதலானோர் பேசும் பேச்சுக்களை அப்படியே பாசுரமிட்டாள். தம் பாசுரத்தைத் தாமே கடாக்ஷித்து, வெறிவிலக்குத்துறையாய் அத்யாத்மசாஸ்த்ரமாய், 'देवतान्तरभजनं तदीयपर्यन्तं त्याज्यम्' என்னுமிடத்தை ஸங்க்ரஹித்துக் காட்டியும் பாகவதர்கள் பெருமையைப் பரக்கப் பேசியும், பலச்ருதியில் 'ஏழுவாத வாயிரத்துள் இவை பத்து வெறிகளும் தொழுதாடிப் பாடவல்லார் துக்கசீலமிலர்களே' என்றும் சாற்றியருளினர். யாவரும் ஸந்தோஷித்துத் துக்கம் நீங்கினர்கள். அங்கு வந்திருந்த தேவதாந்தரபரரும் ஆச்சரியமுற்று 'தீர்ப்பாரை யாமினி' யைக் கொண்டு களி கூர்ந்தார்கள். அவர்கள் யாவரும் ஆழ்வார் திருவடியானார்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸில் அடியிற்கண்ட புத்தகங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்

1.	அதிகரணஸாராவளி (சிந்தாமணி கல்பதரு வ்யாக்யானங்களுடன் கூடியது)		ரூ. 7—0—0
	ஷை பைண்ட் செய்யாதது		5—0—0
2.	விசிஷ்டாத்வைதவேதாந்தகோசம் (அகாதி)		20—0—0
3.	ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் (முதல் பாகம்) (ஸ்ரீ ஸாரபோதினீ வ்யாக்யானத்துடன் கூடியது)	காலிகோ பைண்ட்	6—8—0
		பாதி காலிகோ	6—0—0
	ராப்பர் பைண்ட்		5—8—0
4.	சாற்றுமுறை க்ரமம்		0—12—0
5.	யஜுஸ்ஸந்த்யாவந்தனபாஷ்யம்		0—12—0
6.	ஸ்ரீ ஸந்நிதி நித்யாநுஸந்தானக்ரமம் (இரண்டாம் பதிப்பு) (கோயில் திருவாய்மொழி, ராமாநுஜநூற்றந்தாதிகளுடன் கூடியது)		0—10—0
7.	ஸ்ரீ அஹோபிலமடமும் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரமும் (சித்திரங்களுடன் தமிழ், ஆங்கிலம் இரண்டு பாஷைகளிலும் கிடைக்கும்)		0—2—0
8.	ஸ்ரீ ஸந்நிதி தனியன்கள்		0—3—0
9.	வைபவஸுதா (42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திவ்யசரிதம்)		1—4—0

வி. பி. பி. யில் அனுப்பப்படமாட்டாது. (போஸ்டேஜ், பாக்கிங் செலவு தனி)

ஸ்ரீ

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

நெடுந்தெருவில் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸங்கல்பம் நன்கு நடைபெற்றுவருகிறது. 19-7-55 அன்று திருக்குடந்தை ஸ்ரீ ராகவாசாரியரும் 20-7-55 ல் தில்லைஸ்தானவாஸிகளும் ஆராதித்தார்கள். 23-7-55 ல் திருவாடிப்பூரத்திற்காகவும் 26-வது பட்டம் ஸ்ரீ ரங்கநாதயதீந்த்ர மஹாதேசிகனின் திருநக்ஷத்ரத்திற்காகவும் ஸேவை சாற்றுமுறை தீர்த்தகோஷ்டிகள் முதலியன விசேஷமாக நடந்தன. 26-7-55 ல் ஸ்வாதியாகையால் வழக்கம்போல் பெரியபெருமாளுக்குத் திருமஞ்ஜனம் நடைபெற்றது. ஆடி ஸ்வாதியிலவதரித்த 25-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் அன்று ஸேவைசாற்றுமுறையுடன் நடைபெற்றது. 28-7-55 ல் திருக்குடந்தை ஸ்ரீ ராஜகோபாலாசாரியர் ததீயாராதனம் பண்ணிவைத்தார். ஸ்ரீ அழகியசிங்கர் நெடுந்தெருவில் ஸங்கல்பத்திற்கு எழுந்தருளியிருப்பதை ஸபலப்படுத்திக்கொள்ளவேண்டுமென்று எண்ணிய ஆஸ்திகர்களான உள்ளூர் வாஸிகளுடையவும் வெளியூர் வாஸிகளான பல சிஷ்யர்களுடையவும் ப்ரார்த்தனையின்படி 29-7-55 லிருந்து ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரகாலக்ஷேபம் உபக்ரமித்து நடந்து வருகிறது. ஜய வருஷம் விஜயதசமியன்று உபக்ரமிக்கப்பட்ட ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் 1-8-55 ல் சாற்றுமுறையாயிற்று. அன்று வடுவூர் ஸ்ரீ R.M.S. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ததீயாராதனம் பண்ணிவைத்தார். ஸ்ரீபாஷ்யத்துடன் ஸேவித்து வந்த அதிகரணஸாராவளி காலக்ஷேபம் 7-8-55 ல் சாற்றுமுறையாயிற்று. 8-8-55 லிருந்து கீதா பாஷ்யகாலக்ஷேபம் உபக்ரமமாகி நடந்து வருகிறது. நெடுந்தெருவில் காவேரி ஸமீபத்திலிருப்பதால் ஸ்ரீ ஸந்நிதிக்கு வருகிறவர்களுக்கு ஸ்நாநாதிகளுக்கும் ஸௌகர்யமாக இருக்கிறது. இவ்வூர் போக்குவரத்திற்கும் ஸௌகர்யமாக அமைந்திருக்கிறது.

ஸ்ரீ ஸந்நிதியில் நடக்கும் பகவதாராதன கார்யங்களின் காலக்ரமம் பின்வருமாறு:-

காலை 6 அல்லது 6-30 மணிக்கு விச்வரூபம். விச்வரூபகாலத்தில் ஸுப்ரபாதம் ஸேவித்தவுடன் ஆராதகர் ஸ்ரீ அழகியசிங்கரின் தனியனை அநுஸந்திப்பார். அதன் பிறகு பாடத் தெரிந்தவர்கள் பகவத்விஷயமான பாட்டுக்களைப் பாடுவார்கள். விச்வரூபஹாரத்தியானதும் ஆராதகர் பஞ்சாங்கத்தில் அன்றும் மறுநாளுமுள்ள திதி வார நக்ஷத்ர யோககரணங்களை ஸேவிப்பார். அதன் பின் ஸ்ரீ அழகியசிங்கர் திருப்பல்லாண்டு துடங்கியாகும். பிறகு, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை அங்கண்ஞாலபஞ்ச முதலிய திருமொழிப்பாசுரங்கள், தேசிகப்ரபந்தம், ஸ்ரீ ஸந்நிதி ப்ரபந்தம், தசாவதாரஸ்தோத்ரம், பகவத் த்யான ஸோபானம், அபீதிஸ்தவம், ஸஹஸ்ரநாமம், ஸ்ரீ ந்ருஸிம்ஹாஷ்டோத்தரம் ஸேவை நடக்கும். 7-30 அல்லது 8 மணிக்கு அபிகமனாராதனம் முடிந்து மங்களஹாரத்தியாகி, ஸேவிக்கப்பட்ட ப்ரபந்தங்கள் சாற்றுமுறை நடந்து கோஷ்டிக்கு தீர்த்தம் ஸ்ரீசடாரியாகி கோஷ்டி விநியோகமும் நடைபெறும். பிறகு வேத பாராயணம் ஒரு ப்ரச்னம் நடைபெறும். பெரிய பெருமாளுக்குத் திருமஞ்ஜனம் நடக்கும் தினங்களில் ஸுமார் 9 மணிக்கு அபிகமனமங்களஹாரத்தியும் சாற்றுமுறையும் நடக்கும். வெள்ளிமண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் எல்லா எம்பெருமான்களுக்கும் திருமஞ்ஜனம் பண்ணும் காலங்களில் சாற்றுமுறை 10 மணி ஸுமாருக்கு நடைபெறும்.) 8-30 மணியிலிருந்து 9-30 மணி அல்லது 10 மணி வரை ஸமாச்ரயணம் பரந்யாஸங்கள் நடைபெறும். 10 மணியிலிருந்து 11 மணி வரை ஸ்ரீ அழகியசிங்கர் காலக்ஷேபம் ஸாதித்தாகும். பிறகு மாத்யாஹ்நிக நீராட்டத்திற்கு எழுந்தருளியாகும். அது ஸமயம் ஸ்ரீ ஸந்நிதியில்

இஜ்யாகால ஆராதனம் துடங்கி நடக்கும். 12 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ ஸன்னிதிக்கெழுந்தருளி இஜ்யாராதன மங்களஹாரத்தியைச் செய்தருளியாகும். கோஷ்டிக்கு தீர்த்தம் எடுக்கப்படும். 12-30 மணி ஸுமாருக்கு ததீயாராதனம். 1-30 அல்லது 2 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் ஆச்ரமத்தில் கோஷ்டிக்கு வேதகோஷத்துடன் சந்தன தாம்பூல விநியோகம் நடைபெறும்.

அதுமுதல் 4 மணி வரை புதிதாக ஸேவிக்க வந்தவர்களும் ஸ்ரீ ஸன்னிதி நிர்வாஹவிஷயமாக ஸ்ரீ ஸன்னிதி நியமனம் பெறவேண்டியவர்களும் தண்டம் ஸமர்ப்பிப்பார்கள். பிறகு 5-30 மணி வரையில் காலக்ஷேபம் ஸாதிக்கும்படியிருக்கும். காலக்ஷேபம் முடிந்ததும் ஸாயமநுஷ்டானத்திற்கெழுந்தருளியாகும். அநுஷ்டானம் முடிந்ததும் 7 மணி ஸுமாருக்குப் பானகாராதனத்திற்கு பெருமாள் ஸன்னிதிக்கெழுந்தருளியாகும். ஸன்னிதியில் ஸஹஸ்ரநாமபாராயணம் முடிந்தவுடன் நித்யாநுஸந்தானம் துடங்கி ஸேவை பண்ணுவார்கள். அவ்வமயம் பானகாராதனம் நடக்கும். அதன்பின் 1 அநுவாகம் அல்லது 10 பஞ்சாஶத்க்ரமபாராயணம் நடைபெறும். பிறகு மங்களஹாரத்தியாகி கோஷ்டிக்குப் பானகம் விநியோகமாகும். இரவு 8 மணியிலிருந்து ஆராதனம் துடங்கி 9 மணிக்கு மங்களஹாரத்தி நடைபெறும். பின்பு கோஷ்டிக்கு தீர்த்த விநியோகாதிகள் நடக்கும். இந்த க்ரமங்கள் இருப்பிடத்தில் நடப்பதுபோல ஸஞ்சாரகாலங்களிலும் நடந்து வருகின்றன.

(தொடரும்)

(220-வது பக்கத்தொடர்ச்சி)

எந்த வித்தை கற்றுப் பயனடைய விரும்புபவர்க்கும் அதற்கானதோர் ஆசார்யனும், அவ்வாசார்யனையும் வித்தையையும் குறித்த பிரசாரமும் அவசியமே. ஈச்வரனையொப்பாத மதஸ்தர்களும், நாஸ்திகர்களுங்கூட ஆசார்ய அவசியத்தையும், பிரசார வன்மையையும் ஒப்பியே அனுஷ்டித்து வருகிறார்கள். ஆகவே உண்மை ஆஸ்திகர்கள் இனிச்செய்யவேண்டிய பிரசாரம், அவரவர் ஆசார்யனையும், குலாசார மதாசாரத்தைப்பற்றியதுமே.

“ஏற்றி மனத்தழின் ஞான விளக்கை
யிருளனைத்து
மாற்றின வர்க்கோரு கைம்மாறு மாயனுங்
காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும்
பெரும்புகழ்
சாற்றி வளப்பதுஞ் சற்றல்ல வோமுன்னம்
பெற்றதற்கே

(அதிகார சங்கிரகம். 38)

ஆசார்யாஜ்ஞைகளை, ஸர்வ தேசங்களிலும், தசைகளிலும், காலங்களிலும், பிரதிதினமும், கண்டவிடங்களிலும், கூடியும் தனித்தும் உத்கோஷித்து, லோக ஹிதத்தை, ‘வர்த்ததாம் அபிவர்த்ததாம்’ என்று உரத்துப் பிரசுரித்துப் போவதே ஈசனுக்கும் லோகோத்தாரண கைங்கர்யப் பிரசாரமாகும். அதற்காகவே ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி ஸ்ரீ அழகிய சிங்கரும் தேசசஞ்சாரம் புறப்பட்டுள்ளார். அவரடி பணிந்து, அவர் அருள்மொழியேற்று, அழியாப்பதம் அடைந்திட ஆஸ்தையுடன் அவரிடம் சேர்ந்து கூடி அவர் பெருமானைப் பரக்கப் பிரசுரித்துய்வோமாக.

'செய்யாதன செய்யோம்
தீக்குறளைச் சென்றோதோம்'

என்கிறாள், வீடு வீடாகப்போய்த் தூங்குவோரையும் துயிலெழுப்பி ஸ்ரீமந்நாராயணப் பிரபாவத்தைப் பரக்கப் பிரசாரஞ் செய்த ஸ்ரீ ஆண்டாளும் ‘தீக்குறள்’ என்பதால் சுயமத நூல்கள் தவிர்த்த இதர மத நூல்களைப் பரிசீலனை செய்வதென்றே த்வனிக்கிறது. சுயமத நூல் பிரசாரமும், இஷ்ட தேவதா பிரசாரமும், குலாசாரப் பிரசாரமுமே செய்கிறாள் பூங்கோதை. அவள்வழி பற்றிச் சென்று நாமும் சுயமதப்பிரசாரமும் குலாசாரானுஷ்டானமுங் கைக்கொள்வோமாக.



ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீஅழகியசிங்கரின் திருவுருவப்படத்திறப்பு

ஸ்ரீமதஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதமஹாகலா சாலை, மதுராந்தகம்.

நாளது மன்மத ஹூ சித்திரை மீ 11ந் தேதி யன்றையதினம் இக்கலாசாலையின் சரித்திரத்தில் ஓர் முக்கிய ஸம்பவம் நிகழ்ந்தது. கலாசாலா ஆரம்பகாலத்தில் அத்யக்ஷராக எழுந்தருளி யிருந்து கலாசாலையை ஸ்திரப் படுத்தக் காரணமாக விருந்த மஹானும், தத்காலம் ஸ்ரீமதஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தை அலங்கரிக்கும் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகருமான ஸ்ரீமதழகியசிங்கரின் திருவுருவப் படங்கள் திறந்துவைக்கப்பட்டன.

இக்கலாசாலையில் அத்யக்ஷராக எழுந்தருளி யிருந்தது க்ருஹஸ்தாச்ரமத்திலானபடியால் அம்மாதிரி திருவுருவப்படமும் திறந்துவைக்கப்பட்டது.

இந்த கைங்கர்யத்தை ஏற்றுக்கொண்டு நடத்திவைத்தது இந்தியன் பாங்க் டிபுடி செக்ரடரியும், ஆஸ்திகோத்தமருமாகிய ஸ்ரீ. உப. D. P. பார்த்தஸாரதி அய்யங்கார் ஸ்வாமியே. நமது ஸமூஹத்தில் வித்வத் சிரோமணியாக எழுந்தருளியிருக்கும் கொடவாசல், வித்வான் மஹாமஹோபாத்யாய, ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்யஸ்வாமி அத்யக்ஷராக எழுந்தருளி ஷஷ்டி உத்ஸவத்தை சிறப்பித்தார்.

அதுஸமயம் நமது சிறுவர்களின் வைதிக அபிவ்ருத்தியை உத்தேசித்து நமது ஸுஹ்ருத்தும், வைதிகச்ரத்தையில் அதிகம் ஊக்கம்



கொண்டு உழைப்பவருமான சுதேசமித்திரன் (உதவி பத்ராதிபர்) ஸ்ரீ. உப. குறிச்சி, S. லக்ஷ்மீநாஸிம்ஹாசார்யஸ்வாமி ஓர் சிறந்த சொற்பொழிவு ஆற்றினர்.

இந்த ஸ்வாமிகளின் ஆர்வத்தினுலும், ஒத்துழைப்பினுலும்தான் இந்த உத்ஸவம் வெற்றிகரமாக நடந்தேறியது. அன்னருக்கு நமது மனமார்ந்த நன்றியை அறிவித்துக் கொள்ளுகிறோம்.

ஈ. தி. ராமஸ்வாமி, அத்யக்ஷர்.

[ஷஷ்டி காலத்திலெடுக்கப்பட்ட போட்டோக்களின் ப்ளாக் தயாரிப்பதிலேற்பட்ட எதிர்பாராத தாமதத்தினுல் இந்த செய்தியும் படங்களும் தாமதித்து வெளியாகின்றன. அன்பர்கள் இந்த தாமதத்தைப் பொறுப்பார்கள் என்று நம்புகிறோம்.]

199555

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[தக்ஷிணயனம் வர்ஷ ருது - ஸிம்ஹ மீ 1955 ஆகஸ்டு - செப்டம்பர்]

17-8-55	ஆவணி மீ 1௳	புதன்கிழமை	அமாவாஸ்யை, ஸிம்ஹரவி 9-3, விஷ்ணுபதி, ஸங்க்ரமணதர்ப்பணம்; சூன்யதிதி.
18-8-55	2௳	வியாழக்கிழமை	சூன்யதிதி.
28-8-55	12௳	ஞாயிற்றுக்கிழமை	மூலம்; 28-வது பட்டம் ஸ்ரீ ரங்கநாதசடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்; ஏகாதசி திதி.
29-8-55	13௳	திங்கட்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
30-8-55	14௳	செவ்வாய்க்கிழமை	த்ரயோதசி திதி.
31-8-55	15௳	புதன்கிழமை	சதுர்த்தசி திதி.
1-9-55	16௳	வியாழக்கிழமை	பூர்ணிமை திதி.
2-9-55	17௳	வெள்ளிக்கிழமை	ப்ரதமை திதி.
3-9-55	18௳	சனிக்கிழமை	த்விதீயை திதி.
4-9-55	19௳	ஞாயிற்றுக்கிழமை	த்ருதீயை திதி.
9-9-55	24௳	வெள்ளிக்கிழமை	வைகாநஸ, முநித்ரய, பாஞ்சராத்ர ஸ்ரீஜயந்தி.
12-9-55	27௳	திங்கட்கிழமை	ஏகாதசி.
14-9-55	29௳	புதன்கிழமை	த்ரயோதசி - சதுர்தசி திதித்வயம்.
15-9-55	30௳	வியாழக்கிழமை	அமாவாஸ்யை.
16-9-55	31௳	வெள்ளிக்கிழமை	ஸிம்ஹ சுக்ல ப்ரதமை திதி.

[தக்ஷிணயனம் வர்ஷருது கந்யா மீ]

17-9-55	புரட்டாசி மீ 1௳	சனிக்கிழமை	கந்யாரவி 11-13; ஷடசீதி; ஸங்க்ரமண தர்ப்பணம், கந்யா சுக்ல த்விதீயைதிதி.
19-9-55	3௳	திங்கட்கிழமை	சதுர்த்தி திதி.
20-9-55	4௳	செவ்வாய்க்கிழமை	அதிதி.
21-9-55	5௳	புதன்கிழமை	விசாகம்; 33-வது பட்டம் ஸ்ரீசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

23-9-55	7௨	வெள்ளிக்கிழமை	திருக்கேட்டை; ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
27-9-55	11௨	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி; ச்ரவணம்; ஸ்ரீமத்வேதாந்ததேசிகன் திருநக்ஷத்ரம். (பரிவர்த்தந ஏகாதசி)
28-9-55	12௨	புதன்கிழமை	த்வாதசி; ஹரிவாஸரம் 5-23

குறிப்பு:- எல்லாமாதங்களிலும் ஸங்க்ரமணதர்ப்பணம் செய்பவர்கள் 17-8-55 ல் (ஆவணிமீ 1௨)ஸிம்ஹஸங்க்ரமணதர்ப்பணத்தைமட்டும் செய்யவேண்டும். நான்கு மாதங்கள் மட்டும் ஸங்க்ரமணதர்ப்பணம் செய்கிறவர்கள் ஷ்டி தினத்தில் அமாவாஸ்யை தர்ப்பணம் செய்யவேண்டும்.

இவ்வருஷம் 'ஸாமோபாகர்மா'வை புரட்டாசிமீ 29௨ சனிக்கிழமை செய்வது சாஸ்திரஸம்மதமாகும். ஆவணி 5ந்தேதி, புரட்டாசிமீ 1௨ ஹஸ்தங்களில் அதிமாஸதோஷமும் சாகாதீசனான குஜனுக்கு மௌட்யதோஷமுமிருப்பதால் செய்வதிற்கில்லை. புரட்டாசிமீ 29௨ குஜமௌட்யதோஷமில்லாதபடியாலும், பாத்ரபதஹஸ்தநக்ஷத்ரயுக்த அமாவாஸ்யையானபடியாலும் அன்றுதான் ஸாமோபாகர்மாவைச் செய்யவேணும்.

[ஸம்பாதகர்]

புரோஹிதர்களாயுள்ளவர்கள் கவனிக்கவும்

1. வைதிகத்தில் ச்ரத்தையுடன் வைதிக கார்யங்களை விடக்கூடாது என்ற ஒரு ஆஸ்திக புத்தியினாலேயே உங்களை எல்லோரும் கல்யாணம் முதலிய வைதிககார்யங்களை நடத்தும்படி அழைக்கிறார்கள். அப்படியிருக்கிறவர்களுக்கு நீங்கள் நல்லவிஷயங்களைத் தெரிவிக்கவேண்டியது அவசியம்.

2. அவர்கள், சிகையில்லாமலும், கச்சமில்லாமலும், அவரவர் மதத்திற்குச் சேர்ந்த குறிகளில்லாமலும் இருந்துவந்தால், அவர்கள் செய்யும் கார்யம் பலனையளிக்காததோடு, செய்த கார்யங்களும் செய்யாததற்கு ஒப்பாகவே ஆகும். அத்துடன் துராசாரமே ஒரு பாபச்செயலாகும்.

3. ஆச்ரமத்திற்கு ஏற்ற தர்மாநுஷ்டானத்தைக் கைவிடுதல், ஒரு புண்யகர்மங்களுக்கும் அர்ஹதையை உண்டாக்காது. அதனாலேயே இன்னமும், கல்யாணம், அமாவாஸ்யாதி தர்ப்பணம், ச்ராத்தம் முதலியவைகளில் தலையில் கிராப்பு இருந்தாலும் கச்சம் உடுத்திக்கொள்வதும், நெற்றியில் குறியிட்டுக்கொள்வதும் தொடர்ந்து வழக்கத்தில் நடந்துவருகிறது. முக்யமாக இருக்கவேண்டிய சிகையில்மட்டும் அவர்கள் ஆதரவுகாட்டவில்லை. இவ்விஷயங்களை அவர்களுக்கு நீங்கள் நயமாகச் சொல்லி திருந்தும்படிச் செய்யவேண்டியது உங்கள் கடமை.

4. ஆகவே ஒவ்வொரு புரோஹிதரும் தங்களுடைய பௌரோஹித்யத்திலடங்கினவர்களையும், தங்களுடைய வார்த்தையைக் கேட்கின்றவர்களையும் அவர்களுடைய வீடுதோறும் ஒருதடவைக்குப் பலதடவை சென்று அவர்கள் மனத்தில் உண்மை பதியும்படி பல வழிகளாலும் அவர்களுக்குத் தெரிவித்து அவர்கள் நல்ல ஆசாரத்தில் இருக்கும்படி செய்து வைதிக கார்யங்களைச் செய்யும்படி செய்வித்தால் அவர்களுக்கும் நன்மையுண்டு உங்களுக்கும் நன்மையுண்டு.

5. தவிர இதில் ஊக்கங்காட்டுகிறவர்களுக்கு தங்களுடைய வார்த்தையின்பேரில்

Regd. No. M. 4437.

ஆசாரங்களைத் திருத்திக்கொண்டவர்களைத் தெரிவித்தால் திருந்தின நபரின் எண்ணிக்கையின்பேரில் ஸம்பாவனை வழங்கப்படும். திருந்தினவர்களிடமிருந்து அத்தாக்ஷியாக இந்த தினம்முதல் நாம் திருந்தினோம், திருத்தப்பட்டோம் என்பதையும் அவர்கள் தெரிக்கவேணும். அவர்கள் திருந்தியபடியே 3 மாதத்திற்குக் குறையாமல் நடந்துவரும்விஷயத்தைத் தெரிந்துகொண்டு ஸம்பாவனை கொடுக்கப்படும். மற்றும் இதுவிஷயங்களுக்கு விவரம் வேண்டுவோர்—

ஸ்ரீகார்யம், ஸ்ரீ அஹோபில மடம், நெடுந்தெரு, வழுத்தூர் P. O.,

என்ற விலாஸத்திற்கு தபால்மூலம் தெரிவித்தோ, நேரில்வந்தோ விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும்.

எலிமெண்டரி ஸ்கூல்களையும், மிடில் ஸ்கூல்களையும், ஹைஸ்கூல்களையும் பிரைவேட்டாக நடத்தும் மானேஜர்கட்கும், ஸ்கூல்களிலுள்ள தலைமை ஆசிரியர்கட்கும், மற்றுமுள்ள ஆசிரியர்கட்கும்

SCANNED

தெரிவிப்பதாவது

1. பாரததேசத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் பாரததேசத்தில் பற்றுதல் வேண்டும். தேசப்பற்றுதலுக்கு முதன்மையான புராதனமான தேசாசாரத்திலும், புராதனர்களிடத்திலும் மதிப்பும் பக்தியும் வேண்டும்.

2. பாரததேசத்திற்குத் தனியாக ஏற்பட்ட பெருமை. முக்யமாக, சிகை, வஸ்த்ரம் உடுத்தல் முதலிய ஆசாரங்களிலும், கடவுள் பக்தியிலும் அவரவர்களுக்கு ஏற்பட்ட மதாசாரங்களை இதரர்களுடைய மதாசாரங்களை வெறுக்காது அநுஷ்டித்துவருவதுதான்.

3. இந்த உண்மையை நமது சிறுவர்களுக்கு எடுத்துரைத்து அவர்களவற்றைப் பின்பற்றும்படிச் செய்யவேண்டியது, ஆசிரியர்களுக்கும், பள்ளிக்கூடங்களை நடத்துபவர்களுக்கும் ஏற்பட்ட கடமை. இதுவே அவர்கள் தேசத்திற்கும் வருங்காலத்தவர்களுக்கும் செய்யும் பேருபகாரம். இது ஒவ்வொரு பாரதமக்களும் மனத்திற்கொண்டு செய்யவேண்டிய விஷயம்.

4. எந்த பள்ளிக்கூட நிர்வாஹிகளோ, ஆசிரியர்களோ தங்கள்தங்கள் பள்ளிக்கூடங்களில் உள்ள மாணவர்களை புராதன ஆசாரமான சிகையும் வைத்துக்கொண்டு அவரவர் மதங்களின் கோட்பாட்டிற்கிணங்க நெற்றியிலும் சின்னங்களை தரித்துக்கொண்டு கடவுள்பக்தியுடன் நடந்துவரும்படி செய்து கல்வி கற்கும்படி உபதேசங்களாலும் நய பயங்களாலும் செய்ய முன்வருகிறார்களோ அந்த பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எண்ணிக்கைக்குத் தக்கவாறு இனாம் கொடுப்பதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

5. ஆகையால் எவரெவர்கள் அவைகளில் ஊக்கம் காட்டுகிறார்களோ அவர்கள் தங்கள் பள்ளிக்கூடத்தின பெயர், விலாஸம், மாணவர்களின் எண்ணிக்கை முதலிய விவரங்களுடன் எந்ததினம்முதல் ஷை ஆசார ஒழுக்கத்தைப் பின்பற்றுகிறார்கள் என்ற விஷயத்தையும் தெரிவித்தால், அவைகளைப் பரிசீலித்து ஸன்மானங்கள் செய்யப்படும்.

6. அவர்கள் பள்ளிக்கூடங்களில் ஒன்றிரண்டு பிள்ளைகள்வரைமட்டும் திருந்தச்செய்வது விரும்பத்தக்கதல்ல. ஒரு பள்ளியிலுள்ள எல்லாமாணவர்களும் உள்ளுணர்வுடன் ஆசாரங்களை அநுஸரிக்கும்படி செய்யவேண்டும். அதற்கு முதற்படியாக ஆசிரியர்கள் தாங்கள் அநுஸரிக்கவேண்டும். மற்றும் இதுபற்றிய தகவல்கள் வேண்டுவோர்— ப்ரின்ஸ்பால், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம். என்ற விலாஸத்திற்கெழுதவும்.